


# கலி

கடவுள்கள் வாழும் பிரதேசத்தில்... ஒரு நாள்...

'தேவி..??', என்று கடவுள் தன் துணைவியை அழைக்க....

'சொல்லுங்கள் மஹாபிரபு..?'

'கலி முத்திவிட்டது...'

'எதை வைத்து சொல்கிறீர்கள்..?'

"இன்னுமா உனக்கு புரியவில்லை..?"

"உலகம் வெப்பமயமாதல் அதிகரித்துவிட்டது.. விவசாயம் அழிந்தேவிட்டது.. மனத்தைவிட பணம்தான் முக்கியம் என்றெண்ணுபவர்கள் எண்ணிலடங்காமல் போய்விட்டனர்... மனிதநேயம் வெறும் வெற்றுச்சொல் ஆகிவிட்டது... எமனின் தரகர்களான கொலைகாரர்கள் அதிகமாகிவட்டார்கள்... பேரழிவுகள் பெருகிவிட்டது... நம் பெயர் சொல்லி ஊரை ஏமாற்றி பணம் சம்பாதிக்கிறார்கள்... குழந்தையும் நாமும்(தெய்வமும்) ஒன்று என்று தெரிந்தும்.. குழந்தைகளுக்கு எதிராய் பாலியல் வன்முறைகள் தலைவிரித்தாடுகிறது.... தீவிரவாதம் எல்லாம் மிக சிறிய குற்றமென எண்ணுமளவிற்கு சமுதாயத்திற்குள்ளே ஆபத்துகள் அதிகரித்துவிட்டது..."

"சரிதான் பிரபு... இப்போது என்ன செய்வது..."

"முத்திவிட்ட கலிக்கு "முற்றும்" போட வேண்டிய நேரம் வந்துவிட்டது.."

"பிரபு... அப்படியென்றால் தாங்கள் புதிய அவதாரமெடுத்து போய் பூவுலகை அழிக்க போகும் நேரம் வந்துவிட்டதா..?"

"ஆமாம்.."

"ஆனால்..."

"என்ன ஆனால்..?"

"உங்களுக்கு நீங்கள் அவதாரம் எடுக்கப்போகும் நிபந்தனைகள் தெரியும்தானே.."

"ஏன் தெரியாமல்..? அனைத்தும் யாம் அறிவோம்..."

"இருந்தாலும் எனக்காக ஒருமுறை என்னிடம் அந்த நிபந்தனைகளை கூறுங்களேன் பிரபு..?"

"ஹ்ம்ம்.. ஆகட்டும்... ஆண்டவனே ஆனாலும் அண்டசராசரத்தை ஆளும் ஆதிசக்தியின் ஆட்சிக்கு கட்டுப்பட்டவனான நான்... அவதாரமெடுப்பதற்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவனாகிறேன்... கேள் தேவி..."

"நிபந்தனை #1 மகாவதாரமென்றாலும்... மனிதியின் வயிற்றில்... மாதங்கள் ஈரைந்து கருச்சிறையுற்றுத்தான் பிறக்க வேண்டும்..."

"நிபந்தனை #2 நான் மனிதியின் வயிற்றில் கருவுற்றதும்... "கடவுள்" என்ற எனது அந்தஸ்து பறிக்கப்படும்.. அதாவது நான் வயிற்றில் இருக்கும் நாட்கள் வரை எனது மந்திர தந்திர ஜாலங்கள் பலிக்காது... நான் பிறந்த பிறகு.. அதாவது.. என் பூத உடலின் மீது சூரிய ஒளி பட்டபிறகே எனது அவதாரம் மீண்டும் முழு சக்தியை பெறும்..."

"அதுவரை நான் உங்களை பிரிந்திருக்க வேண்டுமே சுவாமி..?"

"கடமையின் பொருட்டு இந்த பிரிவை நாம் சந்தித்துதான் ஆகவேண்டும் "

"ஆகட்டும் பிரபு... மனிதனாய் பிறந்ததும் தங்களுக்கு மீண்டும் அனைத்தும் சக்திகளும் வசமாகிவிடும்... பிறகு தாமதமில்லாமல் சட்டுபுட்டென்று வேலையை முடித்துவிட்டு திரும்பிவிடுங்கள்... அவதாரத்தை காரணமாக வைத்து இன்னொரு திருமணம் செய்து கொள்ளக் கூடாது.. நியாபகம் இருக்கட்டும்..."

கடவுள் தொண்டையை செருமியபடி.. "ஆகட்டும் தேவி... சென்று வருகிறேன்..."

சில விநாடிகளுக்கு பிறகு..

ஸ்தூல உருவில் கடவுள் பூலோகத்தில் அங்குமிங்குமென்று டிராவல் ஆகி... முட்டி மோதி... எங்கெங்கோ அலைந்து திரிந்து... முடிவில் ஒரு கருவறைக்குள் நீந்திச்சென்று முந்தியடித்துக் கொண்டு கருமுட்டையை உடைத்துக் கொண்டு உள்ளே ஒளிந்துக் கொண்டார்...

சுற்றிலும் காரிருள்.... முற்றிலும் மரண அமைதி...

வயிற்றுக்குள் கேட்கும் விநோத சப்தங்கள் மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தன...

கடவுளின் மைண்ட்வாய்ஸ்

"ஒருவழியாக கருமுட்டையில் இடம் கிடைத்தது... சே...எத்தனை போட்டி... நான்கு கோடி ஆன்மாக்களை முந்தியடித்துக்

கொண்டு... உள்ளே புகுவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது..."

அப்போது வெளியே ஒரு பெண்குரல் கேட்டது...

"ஐ லவ் யூ டா..?"

"லவ் யூ டூ டார்லிங்..?"

கடவுளின் மைண்ட்வாய்ஸ்

"இதோ இப்பிறவியில் என் அன்னை மற்றும் தந்தையின் குரல்... கடவுளே தமக்கு மகனாய் வந்து சூலுற்றிருப்பதை பற்றி தெரியாமல் இருக்கிறார்கள்... தெரிந்தாலும்.. சந்தோஷப்படுவதற்கில்லை.. காரணம்... இம்முறை நான் பிறக்க போவது... உலகை அழிக்க என்று தெரிந்தால்... யார்தான் மகிழக்கூடும்..."

இரண்டு வாரங்களுக்கு  பிறகு...

அந்தர்யாமியாய் அணுவுக்குள் நுழைந்த கடவுள்... அணுசக்தியின் வீர்யம் விஸ்தரிக்க...  மெல்ல மெல்ல... பல்கி பெருகி.. பல அணுக்களாய் பிரிந்து.. கடவுளுக்கு இயற்கை... பிறப்புக் காரியம் நடத்திக் கொண்டிருந்தது... கருவறை எனும் காரிருள் பிரதேசத்தில்... கடவுளுக்கே பயம் வருமளவிற்கு இருள்படர்ந்திருந்தது

கடவுள் மைண்ட்வாய்ஸ்

"நான் இம்மாதர் மடியில் பிறக்கும்வரை.. எனது தேவியுடன் தொடர்பு கொள்ள இயலாது... என்ன செய்ய.. மனதினாய்

பிறக்கும்போது கர்மாக்களுக்கு கட்டுண்டு நடக்க வேண்டியது என் கடமையாகிறது...'

இப்படி அவர் யோசித்துக் கொண்டிருக்கும்போது.. திடீரென்று கருவறையில் நில அதிர்வு போன்றதொரு நடுக்கம்...

'அது என்ன இப்படி ஒரு நடுக்கம்..?'

அந்த நடுக்கத்தை தொடர்ந்து.. வெளியிலிருந்து 'உவ்வேக்க்...உவ்வேக்க்...' என்று சத்தம்...

'கருவுற்றிருப்பதால் என் தாய் ஒவ்வாமையின் காரணமாய் வாயிலெடுக்கிறாள்...'

சிறிது நேரத்திற்குப்பின் அந்த பெண்மணி யாரிடமோ ஃபோனில் பேசும் குரல் கேட்டது...

கடவுளின் தாய் குரல் – 'ஹலோ..?'

ஃபோனில் தந்தையின் குரல் – 'எதுவாயிருந்தாலும் வாட்சப்ல வா...'

கடவுளின் தாய் குரல் – 'உங்கிட்ட ஒரு முக்கியமான மேட்டர் பேசனும்..'

ஃபோனில் தந்தையின் குரல் – 'பரவால்ல வாட்சப்ல வா..?'

கடவுளின் தாய் குரல் – "நான் சொல்றதை கொஞ்சம்..."

ஃபோனில் தந்தையின் குரல் – "ஜஸ்ட் கம் ஆன்லைன்..."

ஃபோன் துண்டிக்கப்படும் சத்தம் கேட்டது.. அதன்பிறகு... வேறெந்த குரலும் கேட்கவில்லை.. தொடர்ந்து மொபைலில் சேட் செய்யும் ரிங்டோன் மட்டும் மாறி மாறி வந்து கொண்டேயிருந்தது...

கடவுளின் புதிய அவதாரத்திற்கான ஆயத்தப்பணிகள் அதிவேகமாய் அரங்கேறிக்கொண்டிருக்க... ஐந்து வாரங்கள் கடந்திருந்த வேளை...

"இதோ... என் இதயம்... உருவாகி... துடிக்க துவங்கிவிட்டது.. இதயம்... கருணையும் காதலும் கலந்து செய்த கருவி... காலமெல்லாம் குருதியோட்டத்திற்கு வழிவகுக்கும் வரப்பிரசாதம்... இனி யாரும்.. என்னை இப்பிறவியில்.. இதயமற்றவனா நீ.. என்று திட்டுவது தர்க்கரீதியில் பொருந்தாது..."

இப்படி நாட்கள் நகர நகர... நாசி... நாபிக்கமலம்... கண்.. காது.. மூக்கு... என்று ஒவ்வொரு உறுப்புகளையும் எண்ணி... கடவுள் சிலாகித்துக் கொண்டிருந்தார்...

மேலும் ஒரு வாரங்கள் இருளோடிருளாய் கடந்தோடின

ஒரு நாள்... வெளியில் மிகவும் சத்தமாய் இருந்தது...

"எங்கோ கூட்டநெரிசலான இடத்திற்கு  என் தாய் வந்தடைந்திருக்கிறாள். இது போன்ற வேளையில் அங்குமிங்கும் அலையலாமா... என் தந்தைதான் இதை அனுமதிக்கலாமா..? மகப்பேறு–ன்  மகத்துவம் தெரியாமல் மாணிடர்கள் ஏன்தான் இப்படி நடந்து கொள்கிறார்களோ..?"

அதே நேரம் வெளியில் தந்தையின் குரல் மூச்சிரைத்து ஓடிவந்து பேசுவதுபோல் கேட்டது..

"ஹே சாரிப்பா.. போலாமா..?"

"என்னடா.. இவ்ளோ லேட்டா வர்ற... எனக்கு இங்க தனியா நிக்கிறதுக்கு எவ்ளோ பயமாயிருக்கு தெரியுமா.. யார்னா பாத்துட்டாங்கனா..?"

"அதான் வந்துடேன்ல.."

சிறிது நேரத்திற்கு பிறகு...

டாக்டர் குரல் – "வாங்க... வாங்க..  ரிப்போர்ட்ஸ்லாம் பாத்தேன்... ட்ரெமெஸ்டர் சார்ட்படி ஒண்ணும் பிரச்சினையில்லதான்..?"

தந்தை குரல் – "தேங்க்ஸ் டாக்டர்..."

டாக்டர் – "நல்லா டிசைட் பண்ணிட்டுதான் வந்திருக்கீங்களா..?"

தந்தை குரல் – 'யெஸ் டாக்டர்..'

'ஓகே... உங்க ஹஸ்பெண்ட்–கிட்ட அஃபிஷியலா நான் கொஞ்சம் கவுன்சிலிங் கொடுக்கனும்..? கொஞ்சம் வெயிட் பண்ணுங்க..?' என்று கூறியபடி டாக்டர் வெளியேறும் சத்தம். அதை தொடர்ந்து...

என் தாய்... தந்தையிடம், 'என்னடா... ஹஸ்பெண்ட்–னு சொல்லியிருக்க..?'

'பின்ன.. உன் ஃப்ரெண்ட் ஹஸ்பெண்ட்–னு உண்மைய சொல்ல சொல்றியா..? கண்டுக்காத... என்ன சொல்றாங்கன்னு கேட்டுட்டு வந்துடுறேன்...' என்று கூறி... தந்தையும் வெளியேறும் சத்தம் கேட்டது...

கடவுளின் மனம் குழம்பியிருந்தது... இப்படி தப்பான ஒரு உறவுமுறையில் கலந்திருக்கும் ஆண் பெண்ணிடம் வந்து பிறக்கவிருக்கிறோமே.. என்றவர் உள்ளம் கலங்கியிருந்தது...

நரகமாய் சில மணித்துளிகள் நகர்ந்தது... மருத்துவ அறையில் மரண நிசப்தம்... ஆங்காங்கே ஏதோ எலக்ட்ரானிக் கருவிகள் எழுப்பும் பீப் சத்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது.. அதை தவிர.. ஹம்ம் என்று ஏசியின் சத்தம் கருவறைக்குள் இருக்கும் மௌனத்தை ஒத்தேயிருந்தது... அந்த அம்மாவுடன் சேர்ந்து கருவுக்குள்ளிருந்து கடவுளும் காத்திருந்தார்...

டாக்டர் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழையும் சத்தம் கேட்டது..

"உங்க ஹஸ்பெண்ட் ரொம்ப அடமண்ட்டா இருக்காரு... நீங்களும் இதுக்கு ஓகே-ன்னு சொல்றார்... உண்மைதானே..?" என்று டாக்டர் கேட்க...

என் தாய், "ஆமா... டாக்டர்.. நானும் அவரும் இதை பத்தி நிறைய பேசிட்டோம்... எங்களுக்கு இந்த குழந்தை வேண்டாம்... ஐ வான்ட் டு அபார்ட்.."

கடவுளின் தலையில் இடி விழுவது போல் உணர்ந்தார்... கத்த வேண்டும் போல் இருந்தது..

"குழந்தை வேண்டாமா... அம்மையே நான் யார் தெரியுமா..? தெரிந்தால் இப்படி செய்வாயா..? நான் உன் வயிற்றில் பிறக்க மட்டும் வரவில்லை... அவதாரமெடுக்க வந்திருக்கிறேன்.. இந்த உலகையே அழித்து புத்துயிர் கொடுத்து புதிதாய் துளிர்விட இயற்கை என்னை ஏவி விட்டிருக்கிறது... என் அழித்தல் கடமையிலிருந்து என்னை கலையச் செய்யாதே... மாதர்குல தெய்வமே.. உன்னை மன்றாடி கேட்டுக் கொள்கிறேன்... என்னை மரணிக்காதே.. நான் பிறந்ததும் கடவுள் சக்தி பெற்றுவிடுவேன்... உனக்கு என்ன வரம் வேண்டுமானாலும் தருகிறேன்... என்னை கொலைக்காதே..?"

ஆனால், கடவுள் தனது தேவியின் துணையின்றி... இரண்டில் ஒரு பேட்டரி கழற்றிய கடிகாரம் போல் செயலற்று போயிருந்ததால் அவரது குரல்... அந்த பெண்ணிற்கு எட்டவில்லை... அந்த டாக்டருக்கும் எட்டவில்லை...

அண்டத்தையே ஆளும் ஆண்டவன் அந்த பெண்ணின் வயிற்றில் பிண்டமாய் உழன்று கொண்டிருப்பதை யாரறிவார்...

டாக்டர் – "ஓகே.. இப்படி படுத்துக்கோம்மா... சிஸ்டர் வாக்யூம் ஆஸ்பிரேஷன் ப்ரொசிஜருக்கு தயார் பண்ணுங்க..?"

எமனாவது பிறந்த உயிர்களையே கொல்வான்... பிறப்பதற்கு முன்பு பிண்டத்தையே கொல்லும் எமனிடமும் இல்லாத கொலைக்கருவிகள் இந்த டாக்டர்களிடமிருந்தது...

சில நிமிடங்களில் ஒரு வெளிச்சப்புள்ளி கடவுளுக்கு தெரிந்தது... அதன் வழியே ஏதோ ஒரு புதுவிதமான உலோகம் உள்நுழைந்து கடவுளை அண்டியது...

ஒரு ஸ்விட்ச் தட்டும் சத்தம்... அதை தொடர்ந்து... அந்த கருக்குடத்திற்குள் ஒரு மாபெரும் சுனாமி அரங்கேறியது...

கடவுள் கண்களை மூடி அமைதியாய் மனதிற்குள் புன்னகைத்து கொண்டார்

"இனி என்னை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது.."என்று தர்க்கமற்ற வார்த்தைகளை நினைத்துக் கொண்டார்..

கலியுகத்தில் ஆண்டவனே அவதரிப்பதென்றாலும் ஆபத்துதான்...

என்று அவர் மேலிடத்தில் கொடுக்க வேண்டிய ரிப்போர்ட்டின் வெர்டிக்ட்–ஐ நினைத்துக் கொண்டார்...

# ★★★நிறைவு★★★




நள்ளிரவு 1.40 மணி!

நான் வேலைமுடித்துவிட்டு வீட்டிற்கு செல்ல இன்று அதிகப்படியாகவே தாமதமாகிவிட்டது. என்ன செய்வது..!? என் வேலை அப்படி..!

இன்றெனப்பார்த்து, என் வண்டி பெட்ரோல் இல்லாமல் நெடுஞ்சாலையில் நின்றுவிட்டது. நேற்றுதான் பெட்ரோல் போட்டேன். ஆனால் ஆஃபீஸில் இன்று எனது நண்பன் ஒருவன், பைக்கை வாங்கி சென்று ஊர்சுற்றுவிட்டு வந்தான். இருந்தாலும், கிளம்பும்போது பெட்ரோல் எவ்வளவு இருக்கிறது என்று செக் செய்யாமல் கிளம்பியது என் தப்புதான். மறதி!

மற்றவர்களைப் போல் என் வீடு, ஆஃபீசுக்கு பக்கமில்லை... 35 கிலோமீட்டர் சென்னையிலிருந்து புறநகருக்குள் செல்லவேண்டும். ட்ரெயினிலும் பயணம் செய்யலாம், ஆனால், நான் அடிக்கடி இரவு வீடு திரும்ப தாமதம் ஆகும் என்பதால், எனக்கு ட்ரெயினை விட, பஸ்ஸை விட என் பைக்தான் சிறந்ததாகப் பட்டது. ஆனால் இன்றிரவு..! சே..! இப்படியா நடக்க வேண்டும்... பசி வேறு பயங்கரமாக வயிற்றைக் கிள்ளுகிறது.

நகரத்தை தள்ளி புறநகர் பகுதியிலுள்ள ஒரு மெயின் பஸ்

ஸ்டாண்டிலிருந்து பைக்கை தள்ளியபடி நடந்துக்கொண்டிருக்கிறேன். பைபாஸ் சாலையைக் கடந்து... என் வீட்டைட சென்றடையா, இன்னும் குறைந்தது 12 கிலோமீட்டராவது செல்ல வேண்டும். இந்நேரம் எந்த வண்டியும் சாலையில் போகவில்லை. ஒரே ஒரு லாரி கடந்து சென்றது, ஆனால் அது வட இந்திய கண்டெய்னர் லாரி, என்னைக் கண்டுக்கொள்ளவே இல்லை! பாவம், ஒவ்வொரு ஊரிலும் அந்த லாரிக்காரன், என்னைப்போல் இருப்பவர்களுக்கு உதவிக்கொண்டிருந்தால், ஊர் போய் சேர்வதற்குள் அவன் ஆயுள் முடிந்துவிடும். அதனால், அவன் என்னைப் புறக்கணித்தத்தில் எனக்கு கோபமொன்றும் இல்லை...

தூரத்தில் ஒரு பெட்ரோல் பங்க் தெரிந்தது. ஆனால், வேஸ்ட்தான், ஏனென்றால், அந்த பங்க் கடந்த 3 மாதமாக மூடப்பட்டிருக்கிறது. என்ன காரணமோ! என்னவோ! மூடிவிட்டார்கள். ஆனால் எனக்குள் வேறொரு எண்ணம் வந்தது. பேசாமல் வண்டியை இந்த காலி பெட்ரோல் பங்க்கில் பார்க் செய்துவிட்டு, வீட்டிற்கு கைவீசியபடியாவது நடந்து போகலாமே..! தேவையில்லாமல் இந்த பைக் சுமையை தள்ளிக்கொண்டு போவானேன்..! சரி, என்று தோன்றியதால் அந்த இயங்காத பெட்ரோல் பங்க்கில் வண்டியை உள்புறமாக தள்ளிச்சென்று, மறைவாக பார்க் செய்தேன்.
சுற்றிலும், கும்மிருட்டு... தெருவிலாவது நிலாவெளிச்சம் தெரிகிறது. ஆனால், இங்கே மேலே போடப்பட்டுள்ள கூரையில் நிலவொளியும் மறைந்துக் போய் வெறும் இருள்மட்டுமே தெரிந்தது. கைகால்களை முறித்துக் கொண்டு அந்த பங்க்கை கொஞ்சம் கூர்ந்து பார்த்தேன். ஆளில்லாத பங்க்தான் என்றாலும், யாரோ இருப்பது போலவே ஒரு ஃபீலிங். திடீரென்று இந்த எண்ணம் வந்ததும், சற்றே பயம் தோன்றியது. சரி கிளம்பிவிடலாம் என்று கிளம்ப எத்தணித்த போது, யாரோ ஒரு பெண் அழும் குரல் கேட்டது.

"ஹ்ம்ம்ம்..ஹ்ங்ங்ங்....ஹ்ம்ம்ம்..!"

எனக்கு ஈரக்குலை நடுங்கியது. நான் கேட்பது உண்மையா இல்லை என் மனப்பிராந்தியா என்று எனக்குள் கேட்டுக் கொண்டிருந்த நேரம், இப்போது அந்த அழுகுரல் கொஞ்சம் சத்தமாகவே கேட்டது

"ஹ்ம்ம்ம்மாஆஆஆ.. ஹ்ம்ம்ம்.."

நான் அங்கிருந்து ஓட்டம் எடுக்கலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால், எனக்கே நான் பயப்படுவது கொஞ்சம் கூச்சமாக இருந்தது.

சரி மெதுவாகவே செல்லலாம் என்று மெல்ல அடியெடுத்து வைக்கப் போக, இருட்டில் ஒரு இரும்பு ட்ரம்மில் கால்களால் முட்டிக்கொண்டேன்.

டங்ங்ங்ங்.. என்று ஒரு பெரிய சத்தம் கேட்டது. அந்த சத்தம் என் பயத்தை அதிகரிக்கவே நான் ஓட்டமாய் ஓடத் துவங்கினேன்.

அந்த ட்ரம் சத்தம் அடங்கியதும், மீண்டும் குரல் கேட்டது.

'யாராஆஆவ்து இருக்கீங்க்லாஆஆ.. ஹ்ம்ம்.. ' மீண்டும் அழுதபடி அந்த குரல் தொடர்ந்தது, 'ப்ப்லீஈஈஈஸ் பதில் சொல்ங்க... ஹ்ங்ங்... ம்ம்ம்மாஆஆ..'

நான் நின்றேன். இது மனிதக்குரல்தான், அதுவும் பெண்குரல்... வேறு எதுவாகவும் இருக்க வாய்ப்பில்லை, ஆனால் இப்படி பூட்டப்பட்ட பங்கிலிருந்து எங்கிருந்து வருகிறது என்று சுற்றும் முற்றும் குரல் வந்த திக்கில தேடினேன்.

'ப்லீஈஈஈஸ்....' மிகவும் தளர்வாக கேட்ட அந்த குரல், தரையிலிருந்து வருவதைத் தெரிந்துக் கொண்டேன்.

கையில் டார்ச் எதுவும் இல்லையே என்று யோசித்தபடி தடவித் தடவி, தரையில் பார்க்க, ஆள் மட்டும் புகுமளவிற்கு ஒரு இரும்பு மூடி தட்டுப்பட்டது. பெட்ரோல்-ஐத் தரைக்கடியில் தேக்கிவைக்கும் சம்ப் வகை டேங்க் என்பது புரிந்தது. அங்கிருந்துதான் குரல் வந்தது என்பதை தெரிந்துக் கொண்டு அந்த சம்ப்-ன் மூடியைத் திறந்தேன். உள்ளே கும்மிருட்டு. கொடுமையே! இங்கிருந்தா குரல் வந்தது என்று எண்ணியபடி உள்ளே எனது செல்ஃபோன் வெளிச்சத்தை பரப்ப, உள்ளே... ஒரு பெண் கை கால்கள் கட்டப்பட்ட நிலையில், ரத்த வெள்ளத்தில் சரிந்திருந்தது கொஞ்சம் கொஞ்சமாய் தெரிந்தது.

'ஹலோ..'

'ண்ணா..!?!'

அண்ணா என்று பரிதாபமாக அந்த பெண் அழைத்தது கொஞ்சம் தைரியம் தரவே நான் தெம்பாக கேட்டேன், 'யாரும்மா நீ..'

'ண்ணா... என்னை... ங்கிருந்து கூட்டிட்ட்ட்ட் போண்ணா..'

பாவமாக இருந்தது. யாரிவள், உற்றுப்பார்க்க, பள்ளிச்சீருடையில்

இருப்பது தெரிந்தது. ஆனால், சீருடை கிழிப்பட்டு, ரத்தம் படறியிருந்தது. யோசிக்காமல் உள்ளே இறங்கினேன். துவாரம் மிகவும் சிறியது என்பது இறங்கும்போது புரிந்தது.

உள்ளே பயங்கர துர்நாற்றம்... தரைமுழுதும் ரத்தம்... கைகால்கள் கட்டிய நிலையில் அந்த பெண் அறைமயக்க நிலையில் சுருண்டு படுத்திருந்தாள்.

"ஹய்யோ...! கடவுளே..! உனக்கென்னம்மா ஆச்சு..' என்று பதறியபடி அவளை தட்டியெழுப்ப, பாவம், அலங்கோலமாயிருந்தாள்.

"அந்த விநோத்-ம், பாலுவும் என்னைக் கடத்திட் வந்து... வந்து..' அதற்குமேல் சொல்லவிருப்பமில்லாமலும் தெம்பில்லாமலும் அழுதாள்..

"யாரு விநோத், யாரு பாலு..?"

"என் க்ளாஸ்மேட்ஸ், கெட்ட பசங்க.. என்னை கடத்திட் வந்த்ட்டாங்ங்'

"அடக்கடவுளே!" எனக்கும் இப்போது அழுகை வந்தது, யாரோ இவளது க்ளாஸ்மேட்ஸ் இவளை கடத்திக்கொண்டு வந்து பலாத்காரம் செய்திருக்கிறார்கள் என்று புரிந்துக் கொண்டேன்.

"எப்போம்மா கடத்துனாங்க..' என்று கேட்க

"தெர்லண்ணா..' என்றாள்

அவள் சொன்ன பதில், என்னையுமறியாமல் என் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. செல்ஃபோனில் மும்முரமாக போலீஸ் நம்பரை டயல் செய்யப் முயல, உள்ளே அந்த சம்ப் டேங்கில் சுத்தமாக சிக்னல் கிடைக்கவில்லை...

"சே..! இங்க சிக்னல் கிடைக்கமாட்டேங்குது.. இரும்மா... நான் மேல போய் ஏதாவது கொண்டு வர்றேன்... பயப்படாதே என்ன?!" என்று அவளையும் தூரத்தில் விழுந்து கிடக்கும் அவள் ஸ்கூல் பேக்-ஐயும் பார்த்தபடி மீண்டும் மேலே ஏற முயன்றேன். திரும்பி வந்ததும், அவள் ஸ்கூல் பேக்-ல் ஏதாவது விவரம் கிடைக்குமா என்று பார்க்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டேன். குறைந்தபட்சம் அவள் பெயராவது அதில் இருக்கும்தானே.. என்று

யோசித்தபடி மேலே ஏறினேன். இறங்குவதைவிட ஏறுவது மிகவும் சிரமமாகத்தான் இருந்தது.

வெளியே வந்து சுற்றும் முற்றும் பார்த்தேன். இருட்டு மட்டுமே அங்கு தெரிந்தது. என் செல்ஃபோன் வெளிச்சம் சுத்தமாக போதவில்லை...

உள்ளே துடித்துக் கொண்டிருக்கும் அந்த பெண்ணின் நிலை மிக மோசமாக இருந்ததை எண்ணி வருந்தினேன். ஏகப்பட்ட ரத்தம் வெளியேறியிருக்கிறது. அவள் பிழைப்பது கடினம்தான் என்றும் தோன்றியது. அந்த டேங்கிற்குள் அடித்த துர்நாற்றம் இன்னமும் குமட்டிக் கொண்டு வந்தது. இப்படிப்பட்ட ஒரு இடத்தில், மிருகத்தனமாய் கைகால்களை கட்டி இப்படி சேதப்படுத்தியிருக்கிறார்கள். பாவிகள். இவர்களை சும்மா விடக்கூடாது. கண்டிப்பாக சட்டத்தின் பிடியில் சிக்கவைக்க வேண்டும் என்று எண்ணியபடி அங்குமிங்கும் புலம்பிக்கொண்டே அலைந்துக் கொண்டிருந்தேன்.

தூரத்தில் டார்ச் லைட் வெளிச்சம் தெரிந்தது... யாரது..!?

இல்லை..! அது டார்ச் லைட் வெளிச்சமில்லை, பைக்-ன் ஹெட்லைட் வெளிச்சம். ஒரு பைக்கில் மூன்று பேர் ட்ரிபிள்ஸ் வந்துக் கொண்டிருந்தனர். ஹைவேயைக் கடக்கும் பயணிகள் என்றுதான் முதலில் நினைத்தேன், ஆனால், அவர்களின் பைக் நேராக பெட்ரோல் பங்கிற்குள்தான் வந்தது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை! முதலில் பயம்தான் வந்தது. செல்ஃபோன் வெளிச்சத்தையும் அணைத்தேன். இருட்டில் தடவித் தடவி சென்று, முன்னம் நான் கால்களில் இடித்துக் கொண்ட இரும்பு ட்ரம்-ஐ அடைந்தேன். அதன் மறைவில் அமர்ந்துக் கொண்டேன். அந்த பைக் உள்ளே வந்து நின்றது. முகம் பாதியாக தெரிந்தது. இறங்கிய மூன்று பேரும் பொடிசுகள். மிஞ்சிப்போனால், 17 வயதிருக்கும். ஆனால், முகத்தில் அந்த 17 ஐவிட அதிகக் குரூரம் இருந்தது. சரக்கடித்திருந்தார்கள்! வாசம் அடித்தது, ஒருவன் பாக்கு போட்டிருந்த வாசமும் சேர்ந்தடித்தது.

"டேய் ஜோசப்பு, புள்ள உள்ளத்தான் இருக்கு..! போ! போய் விளையாடு!"

"நீங்க ரெண்டு பேரும் வரலியா..?"

"ரெண்டு நாளா நாங்கத்தான்டா மாத்தி மாத்தி சாப்பிடுறோம். இன்னிக்கி நீ தனியா என்ஜாய் பண்ணு போ" என்று கூறியவனும் மற்றவனும் பைக்கிற்கு கீழேயே அமர்ந்துக் கொள்ள, அடுத்தவன் நடந்து சென்று, என்னைக் கடந்து, அந்த சம்ப் துவாரத்திற்குள் இறங்கினான். அப்போதுதான் கவனித்தேன். அதுவரை அழுதுக்கொண்டிருந்த அந்த பெண்ணின் சத்தம், இப்போது சுத்தமாக கேட்கவில்லை..! என்ன ஆனது அவளுக்கு... ஒருவேளை..? என்று நான் எண்ணிக்கொண்டிருக்கும்போதே உள்ளே சென்றவன் பதறியபடி மேலேறிவந்தான்.

"டேய் விநோத்தே..! அவ செத்துக்கிடக்கிறாடா.."

"என்னடா சொல்றே..?"

அடக்கடவுளே! நான் நினைத்தது சரிதான் அவள் இறந்துவிட்டிருக்கிறாள். இறக்காமல் என்ன, உள்ளே போனபோது எவ்வளவு ரத்தம் வெளியேறியிருந்ததே..! இந்த சண்டாளர்கள் இப்படி ஒரு சின்னப் பெண்ணின் உயிரை பலியிட்டிருக்கிறார்களே. நான் பார்த்தும் ஒன்றும் செய்யமுடியாதவனாகிவிட்டேனே..! என்று என்னென்னமோ மனதிற்குள் நான் புலம்பிக் கொண்டிருக்க.. என்னையுமறியாமல் கண்களில் நீர் பெருகி ஓடிக்கொண்டிருந்தது.

அந்த மூவரும், ஒவ்வொருவராய் உள்ளே இறங்கினார்கள். நான் உபயோகித்துபோலவே ஒருவன் செல்ஃபோன் வெளிச்சத்தை உபயோகித்தபடி உள்ளே இறங்கினான்.

"ண்ணாஆஆஆ" என்று அவள் பாவமாய் அழைத்தது இன்னும் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. செல்ஃபோன் வெளிச்சத்தில் நான் பார்த்த, பயந்துபோயிருந்த அவளது முகம் கண்களில் தெரிந்து மறைந்தது. ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது, இவர்களை ஏதாவது செய்ய வேண்டும் என்று அதிகமாய் கோபமும் வந்தது. டேங்கிற்குள் இறங்கிய மூவரும் பேசிக்கொண்டது துல்லியமாய் கேட்டது.

"த்தா 2 நாள்லியே செத்துதொலச்சிட்டா, ஒரு நாலு நாலாவது வச்சிருந்து **********னு பாத்தா... இப்டி ஆயிடுச்சே"

அந்த மூவரில் ஒருவன் அவள் இழப்பை வேறுவிதமாய் பேசிய இந்த பேச்சு என் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.

"சரிடா, நான் கிளம்புறேன், வீட்ல தேடுவாங்க" என்று அந்த புதியவன் கிளம்ப பார்த்தான்.

'ஏய்... இர்றாஆஆ... அதுக்குள்ள எஸ்—ஆவரெ... இரு.. பாடிய வெளிய எடுத்து எங்கனா போட்டு போயிடலாம்'

இவர்களை என்ன செய்யலாம் என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று என் செல்ஃபோன் அதிக ஒலியுடன் ஒலித்தது. இளையராஜாவின் மெலோடி பாடலில் வரும் இண்டர்ல்யூட் இசை ஒன்று ரிங்டோனாக வைத்திருந்தேன்... ஆனால், காதுக்கினிய அந்த ஒலி, இப்போது எனக்கு சாவு மணியாக மாறிவிடுமே என்ற பதட்டம் என்னுள் பரவ... சைலன்ட் மோடில் போட தடுமாறினேன். அதற்குள்...

'ஏய், மேல யாரோ இருக்காங்கடா..' ஒருவன் உஷாரானான். நான் பதறி எழுந்துவிட்டேன். என்ன செய்ய சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருக்க.. ஒருவன் உள்ளிருந்து வெளியே தொங்கியபடி குரங்குப்போல் மேலே ஏறிக்கொண்டிருந்தான். இரும்பு ட்ரம்முக்கருகில் நான் நின்றிருந்ததைப் பார்த்தான்.

'ஏய்..! யார்றா நீ..'

நான் ஆவேசமாக ஓடி வந்து, அவனை நோக்கி என் காலால் ஓங்கி ஒரு உதை உதைத்தேன். பதறியடித்து டேங்கிற்குள் விழுந்தான். அடுத்தவன் சுதாரிப்பதற்குள் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. நான் மறைவாய் ஒளிந்திருந்த இரும்பு ட்ரம்மை அந்த சம்ப் டேங்க்கின் துவாரத்தின்மீது நகர்த்திவிட முயன்றேன். ட்ரம் மிகவும் கனமாக இருந்ததால், சிரமமாய் இருந்தது. இதற்குள் குழியிலிருந்து இன்னொருவன் மேலே ஏற முயன்று கொண்டிருந்தான். நான் ட்ரம் நகர்த்துவதைப் பார்த்ததும்...

'ஏய்... ஏய்... த்தா இர்றா.. ஏய்' என்று கோபமாய் கத்திக்கொண்டிருந்தான். நான் ட்ரம்—ஐ கொஞ்சம் கொஞ்சமாய் நகர்த்தி, ஒருவழியாக அந்த துவாரத்தை மூடிவிட்டேன். என் செல்ஃபோன் ஒலிப்பது நின்றது.

அமைதி...

ஃபோனை எடுத்துப் பார்த்தேன். என் மனைவி அழைத்திருந்தாள்.

எங்கோ பக்கத்து தெருவில் கேட்பது போல் சம்ப் டேங்கிலிருந்து அந்த மூவரும் கதறும் குரல் கேட்டது.

'ஏஏ...ய்...' என்ற வார்த்தையைத் தவிர, வேறு வார்த்தைகள் எதுவும் சரியாக கேட்கவில்லை. மூவரில் யாரோ ஒருவர் அழுவது போலவும் கேட்டது. சில சமயம் ட்ரம்மை எம்பி எம்பி அடிப்பதும் தூரத்திலிருந்து கேட்பது போல் கேட்டது.

ட்ரம்மிற்குள் செல்ஃபோன் வெளிச்சமடித்துப் பார்த்தேன். அழுக்குத் தண்ணீர் பாதி அளவிற்கு நிரம்பியிருந்தது. நான் ஓடிச்சென்று பெரிய சைஸ் கற்களை தேடித் தேடி கொண்டுவந்து ட்ரம்மை நிரப்பினேன்.

கொஞ்சம் அயர்ந்து தரையில் அமர்ந்தேன். இன்னமும் அழுகை வந்தது.

மணி பார்த்தேன். 2.30...

நான் செய்த்து சரியா..!

சரிதான்...! என்று அந்த பெண் எனக்குள்ளிருந்து சொல்வது போல் தோன்றியது.
மூவரும் அந்த கும்மிருட்டில் கிடந்து சாகட்டும். பாவம்! அந்த பெண். அவள் பெயரும் தெரியவில்லை. இந்த விஷ ஜந்துக்களால் கடத்தப்பட்டு சீரழிந்து செத்தும் போயிருக்கிறது. அவர்களுக்கு தண்டனை வேண்டாமா..! போலீஸ கேஸ் என்று போனாலும் இவர்களுக்கு அதிகப்பட்சம் சிறைத்தண்டனை கிடைக்கும். ஆனால், நான் இப்போது அவர்களுக்கு கொடுத்திருப்பது, கொடுமையான சிறைத்தண்டனை. அந்த பெண் பசியிலும், தாகத்திலும், வலியிலும் வாடி இறந்ததுபோல். அதே பெண்ணின் பிணத்தை அருகில் வைத்துக் கொண்டு பசியிலும், பயத்திலும், நாற்றத்திலும் வாடி இந்த மூவரும் சாகட்டும். யாருக்கும் இவர்கள் உள்ளே இருப்பது தெரியப்போவதில்லை. செல்ஃபோனும் உதவாது. சிக்னல் கிடைக்காது. இந்த சம்ப் டேங்க்தான் அவர்களுக்கு சமாதி. சாகுங்கள்! இவர்கள் விஷயத்தில் குற்றம், பாவம் , என்றெல்லாம் பார்க்ககூடாது என்று எனக்குள் சொல்லிக்கொண்டு ஒரு புது தெம்பு பிறந்தவனாய் எழுந்தேன்.
இந்த தண்டணையை இவர்களுக்கு இன்று நான் கொடுக்க வேண்டும் என்றுதான் என் பைக் பெட்ரோல் தீர்ந்து நின்றதோ..! தேவையில்லாத முடிச்சு..! முடிந்தது..! எல்லாம் முடிந்தது..! கிளம்பு என்று எனக்குள் சொல்லிக்கொண்டு நடந்தேன்.

அவர்கள் வந்திருந்த பைக்-ஐ சமீபித்தேன். அந்த காலி பெட்ரோல் பங்க்கில் அங்குமிங்கும் தேடி ஒரு பழைய பாட்டில் தேடி

எடுத்தேன். அவர்கள் வந்திருந்த பைக்கிலிருந்து பெட்ரோலை பாட்டிலில் இறக்கினேன். நிமிர்ந்து பார்க்க... 'PURE FUEL' என்று அந்த பங்க்கின் வாசகம் கண்ணில் தெரிந்தது. பாட்டிலை எடுத்துச் சென்று என் பைக்கில் பெட்ரோல் ஊற்றிக்கொண்டேன். மீண்டும் அவர்களின் பைக்கை நெருங்கி, அதைத் தள்ளிச்சென்று, பங்க்கின் பின்புறம் வந்தடைந்தேன். அங்கு ஒரு விவசாய நிலப்பகுதியும், சற்று தூரத்தில் ஒரு பம்புசெட்டும், ஆழ்கிணறும் நிலாவெளிச்சத்தில் தெரிந்தது. யோசிக்காமல், அந்த பைக்கை அந்த கிணற்றுக்குள் தள்ளினேன். அதுவும், பெரிய சத்தத்துடன் விழுந்தது. யாராவது வருவார்களோ! அவசரப்பட்டு சத்தம் செய்துவிட்டோமோ! என்று பயந்தேன். ஆனால், யாரும் வரவில்லை. பரவாயில்லை... பிழைத்தோம்... என்று எண்ணி திரும்பவும் பங்க்கை அடைந்தேன்.

மிக மெதுவாய் அந்த சம்ப் டேங்க்கிலிருந்து சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. இவ்வளவு நள்ளிரவு அமைதியிலேயே மெதுவாய் கேட்கும் இந்த சத்தம், பகலில் கண்டிப்பாய் ஜனநடமாட்ட சத்தத்திற்குள் அமுங்கிவிடும் என்றுதான் தோன்றியது. பைக்கை கிளப்பிக் கொண்டு மனைவிக்கு ஃபோன் செய்தபடி அங்கிருந்து நகர்ந்தேன்.

மூன்று நாட்களுக்குப் பிறகு...

நடந்துமுடிந்த சம்பவம் வெள்ளியன்று நடந்ததாலும், அடுத்த இரண்டு நாட்கள் எனக்கு ஆஃபீஸ் லீவு என்பதாலும் அந்த பெட்ரோல் பங்க்கிற்கு நான் போகவில்லை. இன்று திங்கள் ஆபீஸிற்கு கிளம்பினேன். அந்த பங்க் வழியாக செல்லும்போது கேஷூவலாக ஒரு பார்வையை வீசினேன்.

ட்ரம் இன்னும் அந்த சம்ப் டேங்க்கின் துவாரத்தின் மீதுதான் இருந்தது!




"வேண்டாம்... அவளை விட்டுடு... சுட்டுறாத... ப்ளீஸ்.." நான் கெஞ்சினேன்.

என் கண்முன் அந்த தீவிரவாதி, ஒரு இளம்பெண்ணை துப்பாக்கி முனையில் பிடித்துக்கொண்டிருந்தான்.

"ஏய்... யாரும் கிட்டவரக்கூடாது... அப்படியே திரும்பி போயிடுங்க... இல்லன்னா இவளை சுட்டுடுவேன்..."

"ஹேய்... நோ... ப்ளீஸ்..." என்று நான் இரண்டடி முன்னால் நகர்ந்தேன்.

அந்த கயவன் அவள் பாதங்களில் சுட்டான்.... டம்....

"ஆஆஆஆஆஆஆஆஆஆஆ.." அவள் கதறினாள்...

'ஹேஏஏ.ஏ.. நோ...'

'சார், ப்ளீஸ்... பின்னாடி வாங்க.. அவன்தான் கிட்டவராதீங்கன்னு சொல்றான்ல..' என்னருகில் நின்றிருந்த இன்ஸ்பெக்டர் திராவிடன் என்னை மிரட்டினான்..

அவள் அழுதுக்கொண்டிருந்தாள்.

'ஓ.கே... நான் என் துப்பாக்கியை கீழே வைக்கிறேன். நாம பேசி தீத்துக்கலாம்..'

'நீ துப்பாக்கியை கீழ வச்சிட்டு கிட்ட வந்தா உன்னையும் சேத்து சுட்டுடுவேன்... பின்னாடி போடா.. போலீஸ் நாயே..' என்று அவன் மிரட்டினான். அவன் என் தொழிலை இழிவாக பேசியது கோபம் வந்தது. ஆனாலும், நான் நினைத்தது நிறைவேற வேண்டும் என்பதற்காக உணர்ச்சிவசப்படாமல் கொஞ்சம் கொஞ்சமாக என் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருந்தேன்.

பின்னாலிருந்த இன்ஸ்பெக்டர் திராவிடன், 'சார், நீங்க வாங்க, நாங்க டீல் பண்ணிக்கிறோம். ப்ளீஸ் டோன்ட் மேக் எனி மூவ்ஸ்' என்று என்னை எச்சரித்தான். என்னை இரண்டு கான்ஸ்டபிள்கள் பின்னுக்கு இழுத்துக் கொண்டார்கள். இன்ஸ்பெக்டர் திராவிடன் என்முன் வந்த நின்றுக்கொண்டான். நான் ஏன் இப்படி ஓவர் ரியாக்ட் செய்கிறேன் என்று அனைவருக்கும் குழப்பம்.

அந்த பெண்ணைப் ஏறிட்டுப் பார்த்தேன். நிறுத்தாமல் அழுதுக்கொண்டிருந்தாள். அவளைப் பார்க்க மிகவும் பாவமாக இருந்தது. அவளும் என்னையே பாவமாக பார்த்துக் கொண்டிருந்தாள். 21 வயதுதான் அவளுக்கு. அழகின் உச்சம், சாகவேண்டிய வயதா இது...?

என் முன் நின்றிருந்த இன்ஸ்பெக்டர் அந்த தீவிரவாதியுடன் பேச ஆரம்பித்தார்.

'டோன்ட் வர்ரி, இங்கப் பாரு... நாங்க எல்லாரும் திரும்பி போயிடுறோம். அந்த பெண்ணை மட்டும் எதுவும் செஞ்சிடாதே... ப்ளீஸ்...' என்று அவர் கூறிமுடிக்க, அனைவரையும் திரும்பி நடக்குமாறு செய்கை செய்தான்...

நான் உட்பட அனைவரும் திரும்பினோம். எனக்கு பயங்கரமாக மேல்மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது. ஏனோ என்னால் இருப்புக் கொள்ள முடியவில்லை...

"போங்கடா... போங்கடா இங்கிருந்து...******* " என்று அந்த தீவிரவாதி திட்டுவது முதுகுப்பக்கத்திலிருந்து கேட்க அவ்வளவு வெட்கமாக இருந்தது.

போலீஸ் பூட்சுகள் மெதுவாக நடந்து செல்லும் காலடிச் சத்தம் அந்த புதுக்கட்டிட கூடத்தில் எஃகோ அடித்தது.

திடீரென்று அந்த பெண்ணின் குரல் கேட்டது

"நான் கர்ப்பமா இருக்கேன்..."

நடந்துக் கொண்டிருந்த போலீஸ் அனைவரும் அவளை ஒரே நேரத்தில் திரும்பி பார்த்தோம். அனைவரும் அவளுக்காக பரிதாபப்படுவதை என்னால் உணர முடிந்தது.

அந்த தீவிரவாதி அவளை மிரட்டினான்... "ஏய் நீ வாயை மூடு... இல்லை! சுட்டுடுவேன்! என்னடா நிக்குறீங்க... போங்கடா... " என்றான்.

மீண்டும் அனைவரும் திரும்பினோம். கான்ஸ்டபிள் ஒருவன் திடீரென்று தடுக்கி விழுந்தான். அவன் விழுவதைப் பார்த்த தீவிரவாதி அவன் ஏதோ தன்னை சுடுவதற்காக ஸ்டன்ட் செய்கிறான் என்று நினைத்து அந்த கான்ஸ்டபிளை சுட்டான். குறி தவறவில்லை... போலீஸ் அனைவரும் கலவரமடைந்தனர்...

"ஏய்... நாயே..." என்று இன்ஸ்பெக்டர் திராவிடன் கோபமாக அவனை நோக்கி துப்பாக்கியில் குறிவைக்க...

இரண்டு துப்பாக்கி சத்தங்கள் கேட்டது...

ஒன்று.... இன்ஸ்பெக்டர் திராவிடன், அந்த தீவிரவாதியை சுட்டது...

இன்னொன்று... தீவிரவாதி... அந்த பெண்ணை சுட்டது.

இருவரும் சரிந்து விழுந்து இறந்தனர்.

எனக்குள் நிம்மதிப் பெருமூச்சு...

நான் கடைசி ஆயுதமாக அந்த கான்ஸ்டபிளை கால் தடுக்கி விழவைத்தது பலித்தது.

என் திட்டம் நிறைவேறியது...

அந்த பெண், விநோதா... என் காதலி... இறந்துவிட்டாள்.

நடந்தது என்ன..?

அன்று என் மகள் ரேஷ்மாவின் 22 வது பிறந்த நாள். நான் அஸிஸ்டெண்ட் கமிஷனர் என்பதால் பல விஐபிக்கள் பார்ட்டிக்கு வந்திருந்தார்கள். வீடே வண்ணமயமாக காட்சியளித்தது. விழா மிகவும் கோலாகலாம நடந்துக் கொண்டிருந்தது. அவளிடமிருந்து ஃபோன் வரும்வரை...

அவள்? விநோதா.. வயது 21.

விநோதா என்னுடைய....

மன்னிக்கவும், சொல்லத் தயக்கமாக இருக்கிறது. கொச்சையாக சின்னவீடு, செட்டப், கீப், வைப்பாட்டி என்று கூற விருப்பமில்லை. விநோதா, என் அந்தரங்க காதலி.

'ஹ..லோ..'

விநோதா கிறக்கமான குரலில் தொடர்ந்தாள், 'நந்து', என் பெயர் நந்தகோபால் அவள் என்னை நந்து என்றுதான் கூப்பிடுவாள், 'இன்னிக்கி வாடா..?'

நான் தாழ்மையான குரலில் 'ஹே, இ..ன்னிக்கி முடியாது. நா..ன் நாளைக்கு வறேன்..'

'முடியாது, நீ இன்னிக்கே வா, இன்னிக்கி நைட் உன்கூட இருக்கணும் போலிருக்கு..'

'இல்...ல விநோ. என்னால் இன்னிக்கி வரமுடியாது..'

"உன் மனைவிக்கூடத்தான் இருப்பியா? என்கூட இருக்கமாட்டியா? நீ இன்னிக்கி இங்க வரலைன்னா நான் அங்க வந்துடுவேன்.."

"வேண்டாம் வேண்டாம்.... நா.. நானே.. வர்றேன்.." என்று ஃபோனை வைத்தேன்.

பர்த்டே பார்ட்டி முடிவதற்குள், முக்கியமான வேலை என்று பொய் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டேன். அன்றிரவு விநோதாவுடன் வேண்டா வெறுப்பாய் தங்கினேன்.

மறுநாள் காலை, வீட்டில் என் மனைவியும் மகளும் என்மீது பயங்கர கோபம் காட்டினார்கள்.

நியூஸ் பேப்பரை எடுத்துக் கொண்டு டாய்லெட்டுக்குள் புகுந்தேன். வெஸ்டர்ன் க்ளாசெட்டில் அமர்ந்து பேப்பரைப் புரட்ட, மனம் அதில் லயிக்கவில்லை... என் தலையெழுத்தை நானே நொந்துக்கொண்டேன்.

3 மாதத்திற்கு முன்புவரை இந்த கௌரவமான அஸிஸ்டெண்ட் கமிஷனர் வேலை, மிடுக்கான தோற்றம், அழகான மனைவி, அமைதியான குடும்பம் என்று வாழ்க்கை மிகவும் சுமூகமாக

போய்க்கொண்டிருந்தது. அப்போதுதான் அந்த மாயமோகினியைப் பார்த்து தொலைத்தேன், அட்டகாச அழகுடன், ஜீன்சும் டிஷர்ட்டுமாய், என் முன்பு தனது கல்லூரி விழாவிற்கு சீஃப் கெஸ்ட்டாக என்னை அழைக்க ஸ்டேஷனுக்கு வந்திருந்தாள்.

சே! பார்த்த மாத்திரத்தில், என் வயதையும் வாழ்க்கையையும் மறந்துவிட்டேன். என்ன ஒரு வசீகரம். இப்படியும் ஒரு பெண்ணா..! அவள் கண்கள்... வேண்டாம், நான் அவளை விவரிக்க விரும்பவில்லை, அவள் என்னவள்... கொஞ்சம் தாமதமாய் பிறந்துவிட்டாள்... என்றுதான் தோன்றியது. எனவே, பார்த்த மாத்திரத்தில் நான் சகலத்தையும் விட்டுவிட்டு அவளுடன் வாழத்தயாரானேன்.

விநோதா... என் மகள் ரேஷ்மாவைவிட ஒருவயது சின்னவள்... இருந்தாலும் மதிமயங்கிவிட்டேன். என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

எனக்கு வயது 46 என்றாலும் அழகாகத்தான் இருப்பேன். ஆங்காங்கே எட்டிப்பார்க்கும் என் நரைகள் பிடித்திருக்கிறதென்று விநோதா பலமுறை இரசித்துக் கூறியிருக்கிறாள். அவளை என் வலையில் விழவைக்க நான் மிகவும் சிரமப்படவில்லை. வசதியான வாழ்க்கையை விரும்பியவளாக அவள் இருந்ததால், இரண்டே வாரத்தில் தனி வீட்டில் அவளும் நானும் இரகசிய வாழ்க்கை வாழத்தொடங்கினோம்.

2 மாதங்களும் ஆகவில்லை, அவள் என் மீது அதிகாரம் செலுத்த ஆரம்பித்தாள். வாடா போடா என்று ஆரம்பத்தில் அவள் என்னை அழைத்தது எனக்கு கிறக்கமாக இருந்தது. பிறகு அதையே அவள் அதிகார தோரணையுடன் அழைக்க ஆரம்பித்ததும் கோபம் வருகிறது. என்னை கிட்டத்தட்ட ப்ளாக்மெயில் செய்கிறாள். இராட்சஸி..!

அவள் நினைத்த நேரத்தில் நான் சென்று அவளை சந்தோஷப்படுத்தவேண்டும் என்று விரும்புகிறாள். அது எப்படி? நான் ஒரு குடும்பஸ்தனல்லவா... இந்த நினைப்பு அவளுக்கு வலைவிரிக்கும்போது எனக்கு எங்கே போனது என்று பலமுறை என்னை நான் நொந்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், மாட்டிக்கொண்டேன். என்ன செய்ய...!

அன்று பகல் 11 மணிக்கு நான் ஜீப்பில், ஸ்டேஷனுக்கு போய்க்கொண்டிருந்தபோது, செல்ஃபோன் ஒலித்தது.

'சார், திராவிடன் ஹியர்...'

'யெஸ் திராவிட்'

'சார், NORTH வேலாங்கரையில SKYWAY PARKனு ஒரு அண்டர் கன்ஸ்ட்ரக்ஷன் பில்டிங்ல. நாம தேடிக்கிட்டிருக்கிற ஒரு தீவிரவாதி தங்கியிருக்கிறதா இன்ஃபர்மேஷன் வந்திருக்கு..!'

'ஓ.. இஸ் இட்?'

'யெஸ் சார்... பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் ஏதோ கோர்ட் ஸ்டேயினால 6 மாசமா நின்னிருக்காம். ஆளே இல்லாம இருக்கிற பெரிய ஸ்பாட்.'

'குட்..'

'என்ன பண்லாம் சார்..' என்று திராவிடன் கேட்டுக் கொண்டிருக்க, எனக்குள் ஒரு விபரீத எண்ணம் தோன்றியது.

'ஒரு ஹாஃபனவர் கழிச்சி நான் ஃபோன் பண்றேன் அப்ப எல்லாரும் அங்க வாங்க..'

'சார், அதுக்குள்ள அவன் அங்கிருந்து எஸ்கேப் ஆகிட வாய்ப்பிருக்கு... வி மஸ்ட் பி..'

'எனக்கு சொல்லித்தர்றீங்களா திராவிட்..?'

'அய்யோ... சார்.. ஐ டின்ட் மீன் தட்...'

'அப்போ, இப்போதைக்கு நான் சொல்ற வரைக்கும் யாரும் அங்கே போக வேண்டாம். பில்டிங் எங்கேன்னு எக்ஸாக்டா சொல்லுங்க..?'

'சார், வேலாங்கரை பிரிட்ஜுக்கு கீழே SKYWAY PARKனு ஒரு அண்டர் கன்ஸ்டரக்ஷன் சைட்.. 3rd FLOORல தங்கியிருக்கிறதா தகவல்'

'ஓகே..'

'ஆனா, சார்..' என்று திராவிடன் பேசிக்கொண்டிருக்கும்போதே ஃபோனை வைத்துவிட்டேன்.

ஒரு நிமிடம் நன்றாக யோசித்துவிட்டு, தீர்மானமாய், விநோதாவிற்கு டயல் செய்தேன்.

'ஹாய்டா..' குரலில் அதே கிரக்கம்.

'ஹாய் விநோ டால்' நான் சந்தோஷ மூடில் இருக்கும்போது அவளை விநோ டால் என்று அழைப்பேன். ஆனால் இப்போது சந்தோஷமாய் பேசுவது போல் நடித்துக் கொண்டிருந்தேன்.

'என்னடா செம்ம மூட்ல இருக்கியா..'

'ஆமா, லீவ் போட்டு வர்றேன்... படத்துக்கு போலாமா..?'

அவள் ஏளனமாக, "ஆமா! நீ படத்துக்கு போலாம்னு எங்கேயாவது சப்-அர்பன் ஏரியாவில இருக்கிற டப்பா தியேட்டருக்கு கூட்டிட்டு போவே.. சிட்டிக்குள்ள போலாம்னா சொல்லு... வர்றேன்.."

நான் கோபத்தை அடக்கிக் கொண்டு சிரித்தபடி, "ஹ்ம்ம்... இன்னிக்கி நான் எங்கே கூப்பிட்டாலும் நீ வருவே... ஏன் தெரியுமா..? நான் உனக்கு ஒரு சர்ப்ரைஸ் கிஃப்ட் வச்சிருக்கேன்."

"ஹே... என்னதுடா அது..?"

"உன் பேருல டபுள் பெட்ரூம் ஃப்ளாட் ஒண்ணு புக் பண்ணப்போறேன்.."

"ஹே... எங்கே..?"

"வேலாங்கரை ஏரியாவுல, ஜன்னலைத் திறந்தா கடல் தெரியும்... அப்படி ஒரு சைட்.."

"ஹே... ஐ அம் சோ ஹேப்பி டா.."

"ம்ம்... குட்... பில்டிங் இன்னும் அண்டர் கன்ஸ்ட்ரக்ஷன்லதான் இருக்கு..! நீ என்ன பண்ணு நான் சொல்ற இடத்துக்கு வந்துடு... நானும் பின்னாடியே வந்துடுறேன்... ஃப்ளாட்-ஐ செலக்ட் பண்ணி புக் பண்ணிடலாம்... ஓகே..?"

"ஓகே..டா.. அட்ரஸை சொல்லு.."

சொன்னேன்.

"ஒரு 20 மினிட்ஸ்ல அங்க இருக்கிறேன். ஓகேவா..?"

"ஓகே, அங்கே பில்டிங்ல யாராவது இருந்து உன்னை யாருன்னு கேட்டாங்கன்னா... போலீஸ் அனுப்பின ஆளுன்னு மட்டும் சொல்லு. என் பேரு மட்டும் சொல்லிடாதே..!"

"அய்யே...! பயந்தாங்கொள்ளி! சரி பயப்படாதே...! சொல்லமாட்டேன்.." என்று கலாய்த்தாள்.

'ஹஹ்ஹா.. ஓகே... விநோ டால்... பை..' என்று ஃபோனை வைத்தேன். பொய் சிரிப்பு என் முகத்திலிருந்து அகன்றது.

வேறு வழியில்லை எனக்கு, அவளை கொல்வதைத்தவிர வேறு என்ன செய்வது. நான் ஒரு போலீஸ் என்பதால் அவளை இரகசியமாக ஆள்வைத்துக் கொன்றுவிடுவது மிகவும் சுலபம்,. ஆனால், நான் இதுவரை அவளுடன் வைத்திருக்கும் உறவு பற்றி யாருக்கும் தெரியாது. தெரியவும் கூடாது. எனக்கு என் குடும்பம் முக்கியம்... சமுதாயத்தில் எனக்கிருக்கும் அந்தஸ்து முக்கியம்...

யாருடைய உதவியுமில்லாமல், யாருக்கும் தெரியவும் செய்யாமல், நான் அவளை தொடவும் தொடாமல் இதை செயல்படுத்த விரும்பினேன். திராவிடன் குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் தீவிரவாதி பயங்கரமானவன். அவனை பல ஊரில் தேடுகின்றனர். அவனை பிடிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அவனுக்கு உயிரைக் கொல்வது ஒன்றும் புதிதில்லை என்பதால்,

நிச்சயமாக அவன் விநோதாவைக் கொன்றுவிடுவான் என்ற நம்பிக்கையில்... அங்கு போய்க்கொண்டிருக்கிறேன்.

விநோதா... என்னை மன்னித்துவிடு... உன்னுடன் நான் வாழ்ந்தாகிவிட்டது.. இனி நீ எனக்காக சொர்க்கத்தில் காத்திரு...!

என்று நினைத்தபடி அடுத்த 1 மணி நேரம் கழித்தில், அந்த பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன்-ல் இருந்தேன்.

திராவிடனுக்கு ஃபோன் செய்து போலீஸ் குழுவை அழைத்து வரச்சொன்னேன்.

அவர்கள் வருவதற்குள் உள்ளே என்ன நிலவரம், விநோதா இறந்தாளா இல்லையா என்று தெரிந்துக் கொள்ள தனியாக நான் உள்ளே சென்றேன்.

3 வது தளம்... 6 மாதமாக கட்டுமான வேலைகள் நிறுத்தப்பட்டிருந்ததால், சிமெண்ட் வாசம் சுத்தமாக இல்லை...

அங்குமிங்கும் தேடியலைந்துக் கொண்டிருந்தேன். என்ன நடந்திருக்கும், அந்த தீவிரவாதி அவளைக் கொன்றுவிட்டு தப்பித்துவிட்டிருப்பானா..?

"ஏய்...?" திடீரென்று வந்த குரல் கேட்டு திரும்பினேன்... அந்த தீவிரவாதிதான்

"நி...நீதானே... அந்த.." என்று பேசிக்கொண்டிருக்கும்போதே.... எனக்கருகில் சுட்டான். விலகி தப்பித்துக் கொண்டேன்.

"மரியாதையா இங்கிருந்து போயிடு... இல்லே...!" என்று மீண்டும் துப்பாக்கியால் அருகில் சுட்டான்.

இதற்குள் திராவிடன், நிறைய போலீசுடன் உள்ளே நுழைந்துவிட்டான்.

"ஹே..! நில்லு, நீ இங்கிருந்து தப்பிக்க முடியாது. மரியாதையா சரண்டைஞ்சிடு.." என்று திராவிடன் கூவிக்கொண்டிருந்தான்.

அவன் சட்டென்று ஒரு கதவில்லாத அறைக்குள் நுழைந்தான்.

போலீஸார் அவனை பின்தொடர்ந்தவாறு அந்த அறையை நோக்கி ஓட, அதற்குள் அவனே வெளிவந்தான். இம்முறை, அவனது ஒரு கையில் துப்பாக்கி, இன்னொரு கையில் பணயமாய் விநோதா இருந்தாள்..!

அடக்கடவுளே..! இவள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறாளா.. என்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

அவள் என்னைப் பார்த்த பார்வை இருக்கிறதே...! என் திட்டம் சத்தியமாக அவளுக்கு தெரிந்திருக்கிறது. இவள் ஏதாவது இந்த தீவிரவாதியிடம் உளறியிருப்பாளோ..! இல்லையென்றால் ஒரு வேளை!, இப்போது எல்லா போலீசின் முன்னிலையில் ஏதாவது உளறிவிடுவாளோ! இப்படி எனக்குள் மாறி மாறி எண்ணங்கள் பயமுறுத்திக்கொண்டிருந்தது.

"வேண்டாம்... அவளை விட்டுடு... சுட்டுறாத... ப்ளீஸ்.." நான் பொய்யாக கெஞ்சினேன்.

"ஏய்... யாரும் கிட்டவரக்கூடாது... அப்படியே திரும்பி போயிடுங்க... இல்லன்னா இவளை சுட்டுடுவேன்..."

"ஹேய்... நோ... ப்ளீஸ்..." என்று நான் இரண்டடி முன்னால் நகர்ந்தேன்.

அந்த கயவன் விநோதாவின் பாதங்களில் சுட்டான்.... டம்....

"ஆஆஆஆஆஆஆஆஆஆஆ.." விநோதா கதறினாள். எனக்குள் சந்தோஷம் பரவியது.

"ஹேஏஏ.ஏ.. நோ..." என்று நடித்தேன்.

விநோதாவை ஏறிட்டுப் பார்த்தேன். நிறுத்தாமல் அழுதுக்கொண்டிருந்தாள். என் முன் நின்றிருந்த இன்ஸ்பெக்டர் திராவிடன் அந்த தீவிரவாதியுடன் பேச ஆரம்பித்தார்.

"இங்கப் பாரு... நாங்க எல்லாரும் திரும்பி போயிடுறோம். அந்த பெண்ணை மட்டும் எதுவும் செஞ்சிடாதே... ப்ளீஸ்..." என்று அவர் கூறிமுடிக்க, அனைவரும் திரும்பி நடக்குமாறு செய்கை செய்தான்...

"போங்கடா... போங்கடா இங்கிருந்து...******* " என்று திட்டினான்.

நான் உட்பட அனைவரும் திரும்பினோம். எனக்கு பயம்! திரும்பி போனதும், அவன் விநோதாவை உயிருடன் விட்டுவிட்டால் என்ன செய்வது. அதற்குப்பிறகு, என் வாழ்க்கை நரகமாகிவிடுமே..!

திடீரென்று விநோதாவின் குரல் கேட்டது

"நான் கர்ப்பமா இருக்கேன்..."

திரும்பி நடந்துக் கொண்டிருந்த போலீஸ் அனைவரும் அவளை ஒரே நேரத்தில் திரும்பி பார்த்தனர். அவள் என்னிடம்தான் அதைக் கூறுகிறாள் என்பது எனக்கு புரிந்தது. என்னைச் சுற்றியிருக்கும் போலீசார்கள், இது தெரியாமல், அவளுக்காக பரிதாபப்படுவதை உணர முடிந்தது. எனக்கும் பாவமாகத்தான் இருந்தது. ஆனால், பாதி கடல் தாண்டியாகிவிட்டது. வேறு வழியில்லை...

அந்த தீவிரவாதி அவளை மிரட்டினான்... "ஏய் நீ வாயை மூடு... இல்லை! சுட்டுடுவேன்...! ஏன்டா நிக்குறீங்க... போங்கடா " என்றான்.

மீண்டும் அனைவரும் திரும்பினோம்.

என்ன செய்ய, என்ன செய்ய..!

பாம்பை கொல்லும்போது முழுவதுமாய் கொல்ல வேண்டும், இல்லையென்றால் ஆபத்துதான், இங்கிருந்து அவளை உயிரோடு விட்டுவிட்டு வெளியேறக்கூடாது. என்று நினைத்துக் கொண்டிருந்தபோது சட்டென்று ஒரு யோசனை வந்தது.

எனக்கருகில் நடந்துக் கொண்டிருந்த கான்ஸ்டபிள் ஒருவனை என் காலால் அவனுக்கே தெரியாதவாறு தடுக்கிவிட்டேன். அவன் திடீரென்று தடுக்கி விழுந்தான். அவன் விழுவதைப் பார்த்த தீவிரவாதி அவன் ஏதோ தன்னை சுடுவதற்காக ஸ்டன்ட் செய்கிறான் என்று நினைத்து அந்த கான்ஸ்டபிளை சுட்டான். குறி தவறவில்லை... போலீஸ் அனைவரும் கலவரமடைந்தனர்...

"ஏய்... நாயே..." என்று திராவிடன் அந்த தீவிரவாதியை நோக்கி துப்பாகியால் குறிவைக்க...

இரண்டு துப்பாக்கி சத்தங்கள் கேட்டது...

ஒன்று.... இன்ஸ்பெக்டர் திராவிடன், அந்த தீவிரவாதியை சுட்டது...

இன்னொன்று... தீவிரவாதி... என் விநோதாவை சுட்டது.

விநோதா... இறந்துவிட்டாள்.

2 நாட்களுக்குப் பிறகு...

விநோதா என் வாழ்விலிருந்து மறைந்த 2வது நாளை சந்தோஷமாக அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

எனக்கும் விநோதாவுக்கும் இருந்த உறவைப் பற்றி மிச்சசொச்சமிருந்த ஆதாரங்களையும் எனது போலீஸ் அதிகாரத்தை பயன்படுத்தி அவளது செல்ஃபோன், உடைமைகள் போன்றவற்றை கைப்பற்றி முழுவதுமாக மூடி மறைத்துவிட்டேன்.

அவள் கடைசி நிமிடங்களில் ஏன் என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை என்ற விஷயம் மட்டும் என்னை உறுத்தியது. அவள் நினைத்திருந்தால், போலீசார்களிடையே நான்

நின்றிருந்தபோது ஏதாவது சொல்லியிருக்கலாம், அல்லது, அந்த தீவிரவாதியிடம் எங்களுக்குள்ளிருந்த உறவைப் பற்றிக் கூறி என்னை ப்ளாக் மெயில் செய்திருக்கலாம். ஏதோ..! தப்பித்தவரை லாபம்.

ஐ லவ் யூ விநோதா..

மனதிற்குள் நிம்மதி...

எனது வீட்டில் (முதல் மனைவியின் வீட்டில்தான்) மாலை 6.30 மணிக்கு கட்டிலில் நிம்மதியாக படுத்தபடி டிவி பார்த்துக் கொண்டருந்தேன்.

சேனலை மாற்றி மாற்றி பார்த்துக் கொண்டிருக்க, முடிவில் நியூஸ் சேனலை வைத்தேன்.

என் மனைவி காஃபி கொண்டு வந்து கொடுத்தாள்.

தொலைக்காட்சியில் செய்தியில்...

'2 நாட்களுக்குமுன் வேலாங்கரையில் நடந்த துப்பாக்கி சூட்டில் பிரபல தீவிரவாதியும், அவனது காதலி விநோதா என்கிற விநோதினியும் சுட்டுக்கொல்லப்பட்டது அனைவரும் அறிந்ததே...! ஆனால், விநோதினி அந்த தீவிரவாதியின் காதலி அல்ல என்றும், பிரபல போலீஸ் அதிகாரி ஒருவரின் அந்தரங்க காதலி என்ற திடுக்கிடும் தகவல் தெரியவந்துள்ளது..' என்று உச்சரிப்பு பிழையில்லாமல் படிக்கும் அந்த செய்திவாசிப்பாளினி என் வயிற்றில் அமிலங்கலை ஊற்றிக்கொண்டிருந்தாள்.

எனக்கு காஃபி கொண்டுவந்த மனைவி இதைப் பார்த்தும், காஃபியை தரையில் சிந்தியபடி என்னிடம் கப்பை ஒப்படைத்தாள்.

எப்படி..! எப்படி..! இவர்களுக்கு எப்படி இந்த விஷயம் தெரிந்தது...! நான் மிகவும் ஜாக்கிரதையாக, எனக்கும் விநோதாவிற்கும் இருக்கும் தொடர்பைப் பற்றிய ஆதாரங்கள் எதையும் விட்டுவைக்கவில்லையே..! அழித்துவிட்டேனே..!

செய்தி தொடர்ந்தது...

"விநோதாவின் பிரேதத்தை போஸ்ட் மார்ட்டம் செய்யும்போது, அவளது உணவுப் பையில் ஒரு திக் ப்ளாஸ்டிக் கவர்

கிடைத்ததாகவும் அதற்குள் செல்ஃபோனின் மெமரி கார்டு ஒன்று கிடைத்ததாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.'

அடிப்பாவி..! இப்படி ஒரு சாமர்த்திய எண்ணம் உனக்கெப்படி வந்தது... இப்படி செய்துவிட்டாளே..! என் வேலைக்கும், வாழ்வுக்கும், அனைத்துக்கும் உலை வைத்துவிட்டாளே..!

'அடப்பாவி..! இப்படியுமா மனுஷங்க இருப்பாங்க...' என் மனைவி அந்த செய்தியில் பேசப்படும் நபர் நான்தான் என்று தெரியாமல் புலம்பினாள். எனக்கு அந்த ஏ.சி. அறையிலும் வியர்த்துக் கொண்டிருந்தது....

என் மனைவியின் செல்ஃபோன் ஒலித்தது.. எடுத்து பேசியவாறே அறையை விட்டு வெளியேறினாள்.

அவள் சென்றதும் நான் உடனே ரிமோட்டை எடுத்து ஒலியைக் கூட்டினேன்.

செய்தி தொடர்ந்தது...

'ஒருமுறைக்கு பலமுறை ஊர்ஜிதம் செய்யப்பட்ட பிறகே இந்த தகவலை வெளியிடுகிறோம். பிரபல போலீஸ் அதிபரின் அந்தரங்க காதலியாக விநோதா நடத்திய வாழ்க்கைக்கு ஆதாரமாய் அந்த மெமரி கார்டில் உல்லாச வீடியோ காட்சிகள் பதிவாகியுள்ளன... அந்த காட்சி இதோ...'

என்று கூற, அதில் நானும் விநோதாவும்... சே..! சொல்வதற்கே வெட்கமாய் இருக்கிறது...

என் மனைவி உள்ளே நுழைந்தாள்...

காட்சியை அவளும் பார்த்தாள்...

கெட்டதிலும் ஒரு நல்ல விஷயமாய் அந்த வீடியோவில் என் முகத்தை மட்டும் தெரியாதபடி மறைத்திருந்தார்கள். அரையிருட்டில் மொபைல் ஃபோனில் எடுத்த காட்சியாதலால் என் மனைவியும் என்னைக் கண்டுபிடிக்கவில்லை..!

ஆனாலும், எனக்கு மீண்டும் பயங்கரமாக வியர்த்துக் கொண்டிருந்தது.

'என்னங்க..?'

'என்ன?' என்றேன்.

என் ஃப்ரெண்சுங்க எல்லாம் எனக்கு ஃபோன் பண்ணி கேக்குறாங்க... உங்க டிபார்ட்மெண்ட் ஆளுதானே.! உங்களுக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்குமாம். அதனால, உங்ககிட்ட கேட்டு சொல்லச் சொல்றாங்க..! யாருங்க அது..!' என்று என்னிடமே கேட்டாள்.

'என...க்கு... தெரியாதுமா..! டிபார்ட்மெண்ட்ல ஒருத்தர் ரெண்டு பேரா, எவ்வளவு பேரு இருக்கோம்..' என்று கஷ்டப்பட்டு சிரித்தவாறே சொன்னேன்.

'இவங்களையெல்லாம் நிக்க வச்சி சுடணும்..' என்றாள்.

சுட்டது...

'சாதுர்யமாக கட்டத்தை நகர்த்திய அந்த போலீஸ் அதிகாரி யார்..? இன்று இரவு பத்து மணி செய்தியில்... காணத்தவறாதீர்கள்..'

என்று அத்துடன் அந்த செய்தியறிக்கை முடிந்தது.

அந்த தொலைக்காட்சியின் நோக்கம் இப்போது எனக்கு புரிந்தது. இவர்கள் முகம் மறைத்து வீடியோவை ஒளிபரப்பியது என்னை காப்பாற்றும் நோக்கமோ அல்லது போலீஸ் என்கிற பயமோ அல்ல, இவர்கள் என் முகத்தையும் பெயரையும் வைத்து வியாபாரம் செய்யவிருக்கிறார்கள். இவர்கள் கண்டிப்பாக 10 மணி செய்தியில் என்னைக் காட்டத்தான் போகிறார்கள்.

என்ன செய்வதென்று தெரியவில்லை...! வண்டி எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

விநோதாவும் நானும் வாழ்ந்த வீடு... வந்தடைந்தேன்.

உள்ளே சென்றேன். அவள் இன்னும் அங்கு வாழ்வது போலவே இருந்தது. அவள் புகைப்படத்தில் என்னைப் பார்த்து வெற்றிப் புன்னகை வீசிக்கொண்டிருந்தாள்.

உண்மையிலேயே சாதுர்யமானவள் என்று நினைத்துக் கொண்டேன்.

பாத் டப்பில் சுடுதண்ணீரை நிரப்பினேன். அவளது புகைப்படத்தை எடுத்துவந்து அருகில் வைத்துக் கொண்டேன். உடைகளை களைந்து, தொட்டியினுள் இறங்கினேன். கதகதப்பான நீருக்குள் மூழ்கியபடி அவளது புகைப்படத்தை ஆசைதீர பார்த்துக் கொண்டிருந்தேன்.

பணம்... வசதியான வாழ்க்கை என்று எவ்வளவிருந்தாலும், நீ என்னுடன் சுதந்திரமாக வாழ ஆசைப்பட்டாய்... என்னால் அதை கொடுக்க முடியவில்லை மன்னித்துவிடு... நீ ஏன் மிகவும் தாமதாக பிறந்தாய். முன்னமே பிறந்திருந்தால், இருவரும் கணவன் மனைவியாய் சந்தோஷமாக வாழ்ந்திருக்கலாமே..!

இப்படி ஏதேதோ பேசியபடி அவள் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருக்க...

மணி 10 என்று எனது கைக்கடிகாரம் காட்டியது...

மீண்டும் அவளது புகைப்படத்தை பார்த்துக் கொண்டிருந்தேன்.

துப்பாக்கியை எடுத்து நெற்றியில் வைத்தேன்.

மணி 10.03...

என் செல்ஃபோன் ஒலித்தது.

என் மனைவிதான் அழைத்தாள்....

எடுத்தேன்...

விநோதாவின் புகைப்படத்தைப் பார்த்தபடி ஃபோனில் மனைவியிடம்

"என்னை மன்னிச்சிடும்மா.." என்று இருவரிடமும் ஒரே நேரத்தில் மன்னிப்பு கேட்டபடி, ட்ரிக்கரை அழுத்தினேன்.

டம்ம்ம்ம்...............




**3 நிமிடம் முன்புவரைக்கூட நான் ஆத்திகனாகத்தான் இருந்தேன். திடீரென்று எனக்கு நாத்திக எண்ணங்கள் தோன்றுவதற்கு காரணம், எனக்கு வந்த ஃபோன்கால்கள்தான்.**

**2 ஃபோன்கால்கள் என்னை நாத்திகனாக்கிவிட்ட கொடுமையை நான் என்னென்று சொல்வது.**

**1 வரிகளில் என்னைப் பற்றி சொல்லிவிடுகிறேன். நான் நரேந்திரன். சராசரி மனிதன். ஒரு வருடத்திற்கு முன்புதான் கல்யாணமாகியது.**

**விவேகானந்தரின் இயற்பெயரில் பாதி கொண்டிருந்ததாலோ என்னவோ எனக்கு அவரை ரொம்ப பிடிக்கும். அவரைப் போலவே பல சாதனைகள் செய்வேன் என்று எனது சிறுபிராயத்தில் எண்ணியிருந்தேன். ஆனால் 9 to 5 வேலை, மதியம் டிஃபன் பாக்ஸில் வீட்டு சாப்பாடு, மாதமானால் கிரெடிட் கார்டு பில் பிரச்சினை என்று சாதாரண வாழ்க்கையை என்னால் தவிர்க்க முடியவில்லை. சரி, இதுதான் வாழ்க்கை என்று சகித்துக் கொண்டு வாழ்ந்து வருகிறேன்.**

**அந்த வாழ்க்கைக்கும் உலை வைப்பது போல் எனக்கு வந்த ஃபோன்கால் என்னை உலுக்கிப் போட்டுவிட்டது.**

என்னதான் ஃபோன்கால் அது என்று நீங்கள் கோவப்படுவது தெரிகிறது..? சொல்லிவிடுகிறேன்..!

என் மனைவிக்கு முதல் பிரசவம். இன்று அதிகாலை வலிகண்டு, தனது சொந்த ஊரில் அவளது பெற்றோர்களால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படாள். சிசேரியன் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்களாம்.

நான் அன்புச்சித்தர் சுக்கிலநாத சுவாமிகள்-இன் பரம பகதன். வாழ்வில் பலமுறை எனக்கு இன்னல்கள் ஏற்பட்டபோதெல்லாம் அவரது ஜீவசமாதிக்கு போய்த்தான் ஆறுதலடைந்திருக்கிறேன். எப்போதும் அவரது ஜீவசமாதியின் ஃபோட்டோ எனது பர்ஸில் வைத்திருக்கிறேன்.

இன்று காலை எனக்கு ஃபோனில் தகவல் வந்தபோது முதலில் அவரைத்தான் வேண்டிக்கொண்டேன். குழந்தை நல்லபடியாக பிறந்து தாயும் சேயும் நலமுடன் இருந்தால் அவரது சமாதிக்கோவிலுக்கு 10 பல்புகள் வாங்கி போடுகிறேன் என்று வேண்டிக்கொண்டு தெம்புடன் பஸ்ஸில் ஏறி அமர்ந்தேன்.

இப்போதும் நான் ஆஸ்பத்திரிக்கு போகவில்லை, அவரது ஜீவசமாதிக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறேன். எனக்கு எல்லாமே அவர்தான் என்று எண்ணியிருக்கும் இந்த நேரத்தில்தான் எனக்கு முதல் ஃபோன்கால் வந்தது.

முதல் ஃபோன்கால்

*"ஹலோ.."*

*"மாப்ள நான்தான்"* என் மாமனார் பேசினார்.

"சொல்லுங்க மாமா, தேவிக்கு இப்போ எப்படியிருக்கு.."

"மாப்ள, டாக்டருங்க என்னென்னமோ சொல்றாங்க... ஆப்பரேஷன் பண்ணுமாம்.. குழந்தை ஏடாகூடமா இருக்குதாம். சிசேரியன் பண்ணித்தான் எடுக்கணுமாம். நீங்க கொஞ்சம் சீக்கிரம் வாங்க மாப்ள..."

"பயப்படாதீங்க மாமா... நான் சுக்கிலநாத சுவாமியோட ஜீவசமாதிக்குத்தான் போயிட்டிருக்கேன்... நான் நல்லபடியா வேண்டிக்கிட்டு வந்துர்றேன். நீங்க தைரியமா இருங்க...

அத்தைக்கும் தைரியம் சொல்லுங்க... எல்லாம் சாமி பாத்துப்பாரு..'

'மாப்ள..?'

ஃபோன் கட் செய்யப்பட்டது. நான் தெம்பாகத்தான் இருந்தேன். இருந்தாலும் ஆபரேஷன் செய்யவேண்டும் என்ற செய்தி என்னை கொஞ்சம் உலுக்கிவிட்டது. உடனே பர்ஸை எடுத்து சுவாமி சுக்கிலநாத சித்தரின் புகைப்படத்தை பார்த்துக் கொண்டேன். அவர் மரத்தடியில் உட்கார்ந்தபடி சிரித்துக் கொண்டிருந்தது எனக்கு தெம்பாக இருந்தது. இன்னும் 3 ஸ்டாப்பிங்கில் கோவில் வந்துவிடும்.

இந்த நேரத்தில்தான் எனக்கு அடுத்த ஃபோன்கால் வந்தது.

இரண்டாம் ஃபோன்கால்

'ஹலோ'

'மாப்ள..' மாமாவின் குரல் மிகவும் நடுங்கியபடி இருந்தது.

'சொல்லுங்க மாமா.. என்னாச்சு..?'

'மாப்ள, 2 உசுருல ஒரு உசுரைத்தான் காப்பாத்த முடியுமாம். டாக்டருங்க முடிவா சொல்லிட்டாங்க...'

'அய்யோ.. என்ன மாமா சொல்றீங்க...?'

'மாப்ள நீங்க சீக்கிரம் வாங்க மாப்ள. பயமாயிருக்க... டாக்டருங்க என்னென்னவோ கேக்குறாங்க... எனக்கும் உங்க அத்தைக்கும் ஒண்ணும் புரியல...' என்று ஃபோனை வைத்தார்.

இந்த இரண்டாவது ஃபோன்கால்தான், நான் என்னவோ தப்பு செய்கிறேனோ என்று என்னை யோசிக்க வைத்தது. நான் ஆபத்து நேரத்தில் அவர்களுக்கு உதவி புரியாமல் இப்படி ஜீவசமாதிக்கு போகத்தான் வேண்டுமா..? அப்படி இந்த சித்தரை நம்பி என்னத்தான் பிரயோசனம். நான் இவ்வளவு வேண்டியும் ஒரு உசுரைத்தான் இவரால் காப்பாற்ற முடிந்ததா? என்று எனக்குள் நாத்திக எண்ணங்கள் உதயமாகிய நேரத்தில் கண்டெக்டர் கூச்சல் போட்டார்.

'சமாதிக்கோயில்லாம் இறங்கு..'

நான் இறங்கினேன்.

அருகில் செல்லச்செல்ல அவரது கோவில் மிகவும் காலியாக இருந்தது. எனக்கு இவரிடம் வேண்டலாமா? வேண்டாமா? என்று மாறுபட்ட எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தது.

'அருள்மிகு அன்புச்சித்தர் சுக்கிலநாத சுவாமிகள் அவர்களின் ஜீவசமாதிக்கோவில்' என்று போர்டு என்னை வரவேற்றது.

நான் இந்த சித்தரைப் பற்றி எனது நண்பர் ஒருவரின்மூலம் தெரிந்துக் கொண்டேன். இவர் 50 ஆண்டுகளுக்கு முன் இங்கிருந்த மரத்தடியில் தங்கியிருந்தாராம். அம்மணமாகத்தான் இருப்பாராம். ஒரு நாள் திடீரென்று தன்னை ஒரு குழிக்குள் போட்டு மூடும்படி கூறினாராம். மக்களும் அவ்வாறே செய்ய, இன்னமும் குழிக்குள் அவர் உயிருடன் சமாதியாய் இருந்தபடி அனைவருக்கும் அருள்பாலிக்கிறாராம்.

இதையெல்லாம் நினைவுக்கூர்ந்தபடி நான் அவரது ஜீவசமாதியை நெருங்கினேன். மீண்டும் மாமாவிடமிருந்து ஃபோன் வந்தது.

'ஹ..ஹலோ..'

'மாப்ள..' அழுகுரலில் தொடர்ந்தார்... 'இப்பத்தான் நர்ஸ் ஆபரேஷன் தியேட்டருக்குள்ளருந்து வந்துட்டு போனாங்க...'

'எ..என்...என்னவாம்... என்ன சொன்..னாங்க..?'

'ரெண்டு உசுரையும் காப்பாத்தறது கஷ்டம்னு டாக்டருங்க பேசிக்கிட்டாங்களாம்..'

'அய்யோ..'
'மா..ப்ள...' தொடர்ந்து அழுதபடி 'என் பொண்ணுக்கு ஏதாவதுன்னா, நானும் உங்க அத்தையும் உயிரோட இருக்கமாட்டோம்..'

'மா..மா.... அ..ழா..தீங்க...' என்றபோது என் குரலும் நடுங்குவதை உணர்ந்தேன்.

மாமா ஃபோனை வைத்துவிட்டார்.

*என்ன வாழ்க்கை இது..?*
*எனக்குமட்டும் ஏன் இப்படி நடக்கிறது?*
*இது சரியல்ல... நான் இதை ஒப்புக்கொள்ளமாட்டேன். எனக்கு இவ்வாறு நடப்பது மிகவும் அநியாயம்.*

இப்போது அந்த ஜீவசமாதியை நெருங்கியிருந்தேன். இந்தக் கோவில் திறந்த மைதானத்தில் அமைந்திருந்தது. பொதுவாக வாரத்தில் வியாழன் மட்டும்தான் இந்த சமாதியில் கூட்டம் கூடும். வியாழன்தான் சித்தர் சமாதியான நாள். மற்ற நாட்களில் யாருமே இருக்க மாட்டார்கள். இன்று செவ்வாய் என்பதால் வெறிச்சோடித்தான் இருந்தது.

சுற்றிலும் யாருமே இல்லை... எனக்கு பயங்கர கோபம். சுக்கிலநாத சுவாமியிடம் அழலாம் என்றும் இருந்தது. அதே நேரம் அவர்மேல் கோபமும் வந்தது. அவரை நேரில் நிற்கவைத்து நாலு வார்த்தை நறுக்கென்று கேட்க வேண்டும் என்று தோன்றியது. நேரில் அவரிடம் எப்படி கேட்பது அவர்தான் சமாதிக்குள் ஒளிந்திருக்கிறாரே! என்று கோபம் வந்தது. இன்ஸ்டால்மெண்ட்டில் கோவில் கட்டுமானப்பணி தொடர்ந்து நடந்துக்கொண்டிருப்பதால் கோவிலுக்குள் மண்வெட்டி, கடப்பாரை, பாண்டு, செங்கல் என்று ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தது.

எனக்குள் ஒரு விபரீத எண்ணம் தோன்றியது!

*சமாதிக்குள் உண்மையாகவே சித்தர் உயிருடன் உட்கார்ந்திருக்கிறாரா..? இல்லை இவ்வளவு நாட்களாக நான்தான் அப்படி மடத்தனமாக நம்பியிருந்தேனா..? சமாதியை உடைத்துப் பார்த்தால் என்ன..?*

உள்ளே அவர் உயிருடன் இருந்தால் உரிமையோடு கேள்வி கேட்கலாம். இல்லாமல் வெறும் எலும்புக்கூடு இருந்தால், இதுநாள் வரை அவரை நம்பியிருந்த பக்தர்கள் அனைவரும் மூடர்கள் என்று நிரூபிக்கலாம். எதுவாக இருந்தாலும் இன்றுதான் சமாதியை உடைக்க ஏற்ற நாள். மற்ற நாட்களில் கூட்டமிருக்கும். நான் சமாதியை உடைக்க நினைத்தாலே என்னை வெட்டிக் கூறுபோட்டுவிடுவார்கள்.

மனிதன் கோவப்படும்போது பைத்தியமாகிவிடுவான் என்பார்களே! அப்படித்தான் என் நிலையும் இருந்தது.

***பைத்தியக்காரனாகவே இருந்துவிட்டுப் போவோமே... என்று நான் கோவிலுக்குள் வந்து கதவைச் சாத்திக் கொண்டேன். வெளியில் சற்று தூரத்திலிருந்த பூக்கடைக்காரர் என்னைப் பார்த்தார். நான் இங்கு அடிக்கடி வருபவன் என்பதால் அவர் என்னை அடையாளம் கண்டுக்கொண்டார். நான் தியானம் செய்யப்போவதாகவே நினைத்துக் கொண்டிருப்பார்.***

***உள்ளே வந்ததும்... தாமதிக்காமல் கடப்பாரையை எடுத்தேன். ஜீவசமாதி என்று இதுநாள்வரை நான் வணங்கிக்கொண்டிருந்த அந்த இடத்தில் குத்தினேன். ஏனோ எனக்கு அழுகைதான் வந்தது. இருந்தாலும் தொடங்கிய காரியத்தை நிறுத்த மனமில்லை. மீண்டும் குத்தினேன். சில நிமிடங்களில் சமாதி மூடிய நிலையில் தெரிந்தது. சுற்றிலும் மணல் சூழ்ந்திருந்தது. மண்வெட்டியை எடுத்துக் கொண்டு மண்வாறினேன். கொஞ்சம் கொஞ்சமாக ஜீவசமாதியின் மூடி தட்டுப்பட்டது. அதைத்திறக்க முற்படும்போது...***

***மீண்டும் ஃபோன் வந்தது.***

***பயந்தேன். என்ன செய்தியாக இருக்குமோ. என்று எண்ணியபடி எடுத்து தயக்கமாக...***

***"ஹ...லோ.."***

***"மாப்ள, நாம கும்பிட்ட கடவுள் நம்மளை கைவிடலை, தாயும் சேயும் நலம்னு டாக்டருங்க சொல்லிட்டாங்க... அழகான ஆண்குழந்தை பொறந்திருக்கு மாப்ள... வாழ்த்துக்கள். நான் ஃபோனை வைக்கிறேன். இன்னும் சம்மந்திக்கு ஃபோன் பண்ணணும்" என்று கூறி ஃபோனை கட்செய்துவிட்டார்.***

***எனக்கு எப்படி ரியாக்ட் பண்ணுவது என்றே தெரியவில்லை. சே! என்ன காரியம் செய்திருக்கிறோம். இப்படியா நடந்துக் கொள்வது. பைத்தியக்காரத்தனத்தின் உச்சக்கட்டம் இது... என்று எண்ணியபடி ஃபோனை பாக்கெட்டில் வைத்துக்கொண்டு சமாதியின் மூடியையே பார்த்துக் கொண்டிருந்தேன்.***

***இப்போது கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்துக் கொண்டிருந்தது. சுவாமி சுக்கிலநாத சித்தரை எண்ணிப் பூரித்துப் போனேன்.***

***சமாதி மூடி மீண்டும் கண்களை உறுத்தியது.***

தோண்டியது தோண்டினோம். திறந்து பார்த்துவிடலாமா..! இல்லை... இல்லை... நம்பிக்கையில்லாமல் இல்லை... சுவாமியை நேரில் பார்த்து நன்றி சொல்லலாமே என்று ஒரு எண்ணம் தோன்றியது. அவர் என்னை சபித்தாலும் பரவாயில்லை... பஸ்பமாக்கினாலும் பரவாயில்லை... நான் அவருடைய பக்தனாக சாகவும் தயார். சுவாமியை எப்படியும் நேரில் பார்த்துவிடுவது. என்று எண்ணியபடி அந்த மண்மூடியை அகற்றினேன்.

உள்ளே...

என்று அத்துடன் அந்த பேப்பரில் இருந்த கதை முடிந்தது. தீபா அந்த பேப்பரைத் திருப்பிப் பார்த்தாள். ஒரு நடிகையின் படம்தான் இருந்தது.

கடற்கரையில் சுண்டல் மடித்துக் கொடுத்த பேப்பரில் இப்படி ஒரு கதை இருக்கும் என்று தீபா நினைக்கவேயில்லை... ப்ச்... முடிவு படிக்க முடியாமல் போய்விட்டதே என்று வருந்தினாள். தன்னருகில் அமர்ந்திருந்த சுந்தரிடம்.

'ஹே சுந்தர், சூப்பர் கதைடா... END படிக்க முடியில..'

'ஏன் என்னாச்சு..'

'END வேற பேப்பர்ல போயிடுச்சு...'

'உன்னை யாரு சுண்டல் மடிச்சு கொடுத்த பேப்பரெல்லாம் படிக்க சொன்னது.'

'ஹே, எப்படியாவது அந்த சுண்டல்காரனை தேடிப்பிடிச்சி இந்த பேப்பரோட அடுத்தபக்கத்தை கொண்டுவாடா.. ப்ளீஸ்..'

'விளையாடுறியா..! அவன் இந்நேரம் எங்கே இருக்கிறானோ... சுத்திப்பாரு ஆயிரக்கணக்கான கூட்டம் நடமாடுது... நான் எங்கேன்னு போய் அவனைத் தேடுறது.. அப்படியே தேடிப்பிடிச்சாலும் அவன் அந்த பேப்பரை வேற யாருக்குன்னா மடிச்சி கொடுத்துருப்பான்...' என்று சுந்தர் ப்ராக்டிக்கலாக பதிலளித்தான்.

"ஒரு காதலிக்காக இதுக்கூட செய்யமாட்டியா... அவனவன் வானவில்லை வலைச்சு தர்றேங்கிறான்... நிலாவை உடைச்சு ஒரு துண்டு கொண்டு வந்து தர்றேங்கிறான்... நீயும் இருக்கியே.." என்று புலம்பினாள்.

"அந்தமாதிரி டைலாக்கெல்லாம் எனக்கு வராது... டைம் ஆகுது பாரு... போலாம் வா.." என்று எழுந்தான்.

தீபாவும் எழுந்தாள். இருவரும் கைகோர்த்தபடி மணலில் நடந்து செல்ல, கடற்கரையில் மக்கள் போடும் கூச்சலில் அலையின் சத்தத்தோடு சேர்ந்து அந்த கதை கொஞ்சம் கொஞ்சமாக தீபாவுக்கு மறந்து போனது...




ஒரு வழியாக 3 நாட்கள் பிடித்தது...

எதற்கா..?

நான் வந்து குடியேறிய இந்த வீட்டில் எல்லா விஷயங்களையும் செட்டில் செய்வதற்கு (பணத்தையும் சேர்த்துத்தான்).

நல்ல வீடு... என் போன்ற பேச்சுலர்களுக்கு இதுமாதிரியான தனி வீடு அவ்வளவு சீக்கிரத்தில் கொடுக்க மாட்டார்கள். என்னைப்பற்றி சொல்லவேயில்லியே..! நான் ரமேஷ்... கொரியர் ஆஃபீஸில் வேலை...

வேலை தேடி சென்னைக்கு வரும் என் போன்ற வாலிபர்களுக்கு கொரியர் வேலைதான் வெகு சுலபத்தில் கிடைக்கிறது. சில சினிமாக்ககளிலும் பார்த்திருக்கிறேன். கதாநாயகன் ஊரிலிருந்து வருவான் சின்ன வேலையில் சேருவான், விரைவில் கதாநாயகியை முதல் முறையாக பார்ப்பான்... உடனே காதல்... டூயட்...

இப்படித்தான் கதை போகும்.

சே! சே! என் விஷயத்தில் அப்படியெல்லாம் நடக்காது... என்றுதான் எண்ணியிருந்தேன்... அவளைப் பார்க்கும் வரை...

அவள்... பெயர் தெரியவில்லை... ஆனால், ஒரு சோகமான விஷயம் அவளுக்கு கல்யாணம் முடிந்திருக்கிறது. அதனாலென்ன! அழகாயிருக்கிறாளே! அவள் கணவன் கை கால் விழுந்துபோய் பக்கவாதம் வந்து அசிங்கமாக வீல்சேரில் அமர்ந்தபடி குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருப்பான். இவனுக்கு இவ்வளவு அழகான மனைவியா, என்று வயிறு எரிகிறது. என்ன செய்வது... விதி என்றுதான் வழக்கமாக சொல்லவேண்டும். ஆனால், அப்படியெல்லாம் நான் சொல்லி என்னை நானே சமாதானப்படுத்திக்கொள்ளப் போவதில்லை... எனக்கான சேன்ஸை எதிர்பார்த்து எப்போதும் என் வீட்டு பால்கனியில் காத்திருக்கிறேன். எனது பால்கனியிலிருந்து பார்க்கும்போது, அவள் குடியிருக்கும் வீடு கிட்டதட்ட 60% சதவிகிதம் புலப்படுகிறது. நான் குடியேறிய வீட்டில் பெரும்பாலான நேரம் பால்கனியிலேயே செலவிடுகிறேன்.

புடவையில் ஒரு பெண் இவ்வளவு அழகாக இருக்க முடியுமா என்று தோன்றும். அவளுக்கு வெவ்வேறு மாடர்ன் டிரஸ்களை என் கற்பனையில் அணிவித்திருக்கிறேன். ம்ஹூம்.. அவளுக்கு புடவைதான் அழகு... நான் அடிப்படையில் கொஞ்சம் கூச்ச சுபாவம் என்பதால் அந்தரங்கமாக அவளது வர்ண்னையை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை...

அவளும் என்னை பார்க்கிறாள். பார்வையா அது.. அய்யோ... அதில் 1000 இன்விடேஷன். எப்போது என்னை வந்து அடையப்போகிறாய் என்று சங்ககால பாடல்களில் சொல்வார்களே அப்படி ஒரு பசலை நோய் அவளுக்கு என்னை பார்க்கும்போது ஏற்படுவதை நான் டெலிபதியில் உணருகிறேன். சில சமயம் அவள் வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்க்கும்போது எனக்கு ஜூரம் வந்தது போல் ஆகிவிடும்.

அவளிடம் இதுவரை நான் பேசியதில்லையே தவிர எங்களுக்குள் அடிக்கடி ஒரு விளையாட்டு விளையாடுவோம். என்ன தெரியுமா..? நான் பால்கனியில் நிற்க, அவள் அவளது வீட்டு வாசலில் நின்று கொள்(ல்)வாள். இருவரும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொள்வோம். யார் பார்வையை முதலில் விலக்குகிறார்கள் என்பதுதான் அந்த கேம். ஒவ்வொருமுறையும் தோற்றவன் நான்தான். இந்த இடத்தில் அவள் பார்வையைப் பற்றி ஒரு கவிதை சொன்னால் நன்றாக இருக்கும்தான். ஆனால் எனக்கு கவிதை எழுத வராது... அதனால் மன்னியுங்கள்.

இந்த பார்வை மாற்றும் விளையாட்டு மட்டும் போதவில்லை... இன்று அவளிடம் முயற்சி செய்தே தீர்வது என்று முடிவெடுத்தேன். . அவள் கணவன் கைகால் விழுந்தவன்தானே, நான் வீட்டில் சென்று பேசினாலோ அல்லது வேறு ஏதாவது.. செய்தாலோ என்ன செய்துவிடப்போகிறான்..! எனவே எனக்கு நானே தைரியம் சொல்லிக்கொண்டு வீட்டைப்பூட்டிக்கொண்டு கிளம்பினேன்.

மணி, மதியம் 3... உண்ட மயக்கத்தில் பலரும் மயங்கிக் கிடக்கக்கூடிய மதிய வேளையில், வேறு பசியுடன் நான் அவள் வீட்டுக் கதவை தட்டினேன். கதவு திறந்தாள், உள்ளே வரச்சொன்னாள். குரலின் இனிமையில் நான் மாண்டு மீண்டேன்.

உள்ளே அவள் கணவன் வீல்சேரில் அமர்ந்தபடி கண்களால் மட்டும் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் விழி மட்டும் அசைந்து கொண்டிருந்தது. என்னையும் அவளையும் மாறி மாறி பார்த்தான். அவனுக்கு நாங்கள் செய்யவிருக்கும் தப்பு தெரிந்திருக்குமோ.. என்று எண்ணினேன். தெரியாமல் எப்படியிருக்கும், அவனும் ஒரு ஆண்மகன்தானே, என் நிலையில் அவன் இருந்தால் அவன் நிலையில் நானிருந்தால் என்னென்ன நினைப்போம் என்று யூகித்து கொள்ள, அவன் கண்டிப்பாக எங்களிருவரிடையே நடக்கவிருக்கும் விஷயங்களை கணித்தவனாகத்தான் தோன்றினான்.

அவள் கையில் ஏதோ ஒரு வெள்ளை திரவத்தை கொண்டு வந்து கொடுத்தாள்.. வாங்கி பருகினேன். சத்தியமாக சொல்கிறேன். இதுவரை நான் அதுபோன்ற ஒரு பாணத்தை பருகியதேயில்லை... என்னவென்று தெளிவாக சொல்லமுடியாதபடி வெகுருசியாக இருந்தது. நான் அவள் கணவனைப் பார்ப்பதை தவிர்த்தேன். ஏனென்று தெரியவில்லை அவனைப் பார்க்க எனக்கு பயமாக இருந்தது. என்னருகே சோஃபாவில் அமர்ந்துக் கொண்டிருந்த அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவளும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உங்க பேரென்ன..?"

"ஆரியமாலா.." என்றாள்.

வித்தியாசமான பெயர், எனக்கு அவள் பெயர் கேட்டவுடனே, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் "காத்தவராயன்" என்ற படத்தில் சாமியார் வேடத்தில் ஆரியமாலா.. ஆரியமாலா... என்று ஜபிப்பது போல் பாடுவாரே.. அதுதான் ஞாபகம் வந்தது.

சில பாடல்கள் கேட்கும்போது, அன்று முழுவதும் மனதிற்குள் நமக்கே தெரியாமல் அதுபாட்டுக்கு ஒலித்துக் கொண்டே இருக்கும்.

அதுபோல எனக்கு ஆரியமாலா.. ஆரியமாலா... என்ற பாடல் ஒலிக்க ஆரம்பித்தது.

அவள் எழுந்தாள். எதற்காக இருக்கும்.. அதற்காகத்தான் இருக்குமோ! என்று ஒரு தப்பு கற்பனை செய்தேன். ஆனால், அவள் என்னிடம் வராமல் நேரே வாசல் கதவுபக்கம் சென்றாள்.

நான் அவள் செல்வதைப் பார்த்தபடி வீட்டு சுவற்றில் மாட்டப்பட்டிருக்கும் படங்களை பார்த்தேன். எல்லாம் அருமையான ஓவியங்கள் வீட்டின் சுண்ணாம்பு கலர் உட்பட பயங்கர ரம்யமாக இருந்தது. அவள் வாசற்கதவை தாழிட்டாள்.

திரும்பி கதவில் சாய்ந்தபடி என்னைப் பார்த்தாள்.

இப்போ நான் ரெடி என்பது போல் இருந்தது அந்தப் பார்வை...

நான் ஒருமுறை அவள் கணவைப் பார்த்தேன். பரிதாபமாக இருந்தது. எழுந்து நின்றேன்.

அவள் என்னை நெருங்கி வந்தாள்.

நானும் நெருங்கினேன்.

ஆரியமாலா... ஆரியமாலா.. ஆரியமாலா... ஆரியமாலா...

நெருக்கம், எங்கள் தேகங்களையும், தூரங்களையும் சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

என்னோடு வெகுநாட்கள் பழகியவள் போல் எனக்காகவே இவ்வளவு நாட்கள் காத்துக்கொண்டிருந்தவள்போல் என்னை மிகவும் உரிமையோடு கட்டிக்கொண்டாள்.

ஆரியமாலா... ஆரியமாலா.. ஆரியமாலா... ஆரியமாலா...

உதட்டோடு உதடு முத்தமிட்டுக் கொண்டோம். என் கண்களில் நீர் வழிந்தது...

ஆரியமாலா... ஆரியமாலா.. ஆரியமாலா... ஆரியமாலா...

என் உடம்பிற்குள் என்னவென்று தெரியாதபடி ஒருவித சக்தி பரவியது. அந்த சக்தியில் நான் எரிந்து கருகிவிடுவேனோ என்பது போல் இருந்தது.

ஆரியமாலா... ஆரியமாலா.. ஆரியமாலா... ஆரியமாலா...

எனக்கு பின்னால் அமர்ந்திருக்கும் அவள் கணவன் எழுந்து நிற்பது போல் ஒரு பிரம்மை... அப்படியே முத்தமிட்டுக் கொண்டே அவளையும் சேர்த்து திருப்பிக் கொண்டே பார்த்தேன். உண்மைதான், ஆரியமாலாவின் கணவன் எழுந்து நின்றுக் கொண்டிருந்தான்.

நான் என்னை சட்டென விடுவித்துக் கொண்டேன்.

ஐயோ.. இது என்ன, இவனுக்கு பக்கவாதமிருக்க எப்படி எழுந்து நிற்கிறான்..? என்று பார்த்தேன்.

அவனுக்கும் கண்களில் நீர் வழிந்துக் கொண்டிருந்தது. திரும்பி ஆரியமாலாவைப் பார்த்தேன். அவள் என்னை அதே மதனப்பார்வையில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கணவன், புத்துயிர் பெற்றவனாக ஓடிச்சென்று கதவை தாழ்திறந்துக் கொண்டு ஓட ஆரம்பித்தான். அவன் ரோட்டில் ஓடும் கடைசி காட்சியை வீட்டு ஜன்னலிலிருந்து என்னால் பார்க்கமுடிந்தது. இவன் ஏன் இப்படி ஓடுகிறான். இவனுக்கு என்ன அப்படி ஒரு பிரச்சனை என்று நான் எண்ணிக்கொண்டிருக்கும்போதே என் உடம்பு கல் போல் கனக்க ஆரம்பித்தது. கைகால்கள் மூட்டுக்கள் எல்லாம் சேர்ந்து இறுகி கல் போல் ஆவதை உணர்ந்தேன். வலியும் வேதனையும் தாங்க முடியாமல் சரிந்து விழுந்தேன்.

ஆரியமாலா என்னை தூக்கிச் சென்று இதற்குமுன் அவள் கணவன் உட்கார்ந்திருந்த வீல்சேரில் என்னை அமர்த்தினாள்.

"என்னை மன்னிச்சிடு நரனே..! நான் தேவலோக கன்னி, சாபத்திற்குட்பட்டவள். என் சாப விமோசனப்படி நான் 1000 ஆடவர்களுக்கு முத்தமிட வேண்டும். நீ 237 ஆவது ஆள். 1000 எண்ணிக்கையை தொடும்வரை எனக்கு மரணமுமில்லை, வயோதிகமுமில்லை... இப்படியே ஊர் ஊராக சென்று ஒவ்வொரு ஆடவராக பிடித்து முத்தமிட்டுக் கொண்டிருக்கிறேன். அடுத்தவன் சிக்கும்வரை நீ இப்படித்தான் கல்லாக இருப்பாய். உன்னை நான் கவனித்துக் கொள்கிறேன். அடுத்தவன் வந்ததும் நீ போகலாம். பயப்படாதே உன்போல சபலர்கள் பூலோகத்தில் நிறைய உண்டு" என்று கூறியபடி அவள் என்னைக் கடந்து சென்றதை விழி மட்டும் அசைந்தபடி இருக்கும் என்னால் திரும்பி பார்க்க முடியவில்லை.




மலைப்பாதையில் மிதமான வெயிலில் மாலை நெருங்கிக் கொண்டிருக்க, ஹேர்பின் வளைவுகளில் அந்த Ford Fiesta கார் வளைந்துக் கொண்டிருந்தது. உள்ளே 3 பேர் இருந்தனர். அந்த மூவர் முகத்திலும் பணக்காரக்களை தெரிந்தது. தெரியாமல் எப்படி இருக்கும், சென்னையில் பெரிய ஏற்றுமதி இறக்குமதி கம்பெனியின் பார்ட்னர்ஸ் அல்லவா.

பின்சீட்டில் தனியாக ஜோஷ்வா அமர்ந்திருந்தான், "அதெப்படிடா ஒரு எலுமிச்சம்பழம் நம்ம பிரச்சினைய தீத்துடும். கேக்கவே சில்லியா இல்ல..." என்று ஆரம்பித்தான்.

டிரைவர் சீட்டுக்கு இடதுபக்கத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீதர்

பதிலளித்தான் "ஹேய் நம்பிக்கை வைடா... வேலைய விட்டுட்டு இவ்வளவு தூரம் எஸ்டேட் பங்களாவுக்கு வந்து அந்த மந்திரவாதி சொன்னதை செஞ்சிட்டு திரும்பிட்டிருக்கோம்! இந்த நேரத்துல போய் இதெல்லாம் நடக்குமான்னு நம்பிக்கையில்லாம பேசிட்டிருக்கே..?"

வண்டியை ஓட்டிக் கொண்டிருந்த சூரஜ் இதையெல்லாம் கேட்டபடி "ஐ அக்ரீ வித் ஜோஷ்-டா, எனக்கும் இந்த எலுமிச்சம்பழம் மேட்டரெல்லாம் சுத்தப் பேத்தலாத்தான் தோணுது.."

"டேய் இதை நீ பேசாத, அன்னிக்கி குடிச்சிட்டு இதே மலைப்பாதையில அந்த பொண்ணு மேல காரை ஏத்துனப்ப யோசிச்சியிருக்கணும், உங்ககிட்டல்லாம் டிஸ்கஸ் பண்ணிட்டுத்தானே அந்த மந்திரவாதிகிட்ட போயிட்டு வந்தேன். இப்போ என்னமோ புதுசா கிளப்புறீங்க..? அதான் எல்லாம் செஞ்சாச்சுல்ல, இப்ப திரும்ப போகும் போது எந்த சர்ச்சையும் வேண்டாம். இனிமே ஒண்ணும் ஆகாது. பேசாம வண்டியை ஓட்டு.." என்று ஸ்ரீதர் கோபமாக கூற, சூரஜ் சிரித்துக் கொண்டான். ஸ்ரீதர் அவனை ஒருமுறை முறைத்துப் பார்த்தான்.

"அப்ப பிரச்சினைக்கு நான்தான் காரணம்னு சொல்றியா..?" என்று வண்டி ஓட்டியபடி சூரஜ் புலம்பினான்.

"நான் ஒண்ணுமே சொல்லலியே..?"

"நீங்களும்தானேடா குடிச்சியிருந்தீங்க..?", சூரஜ் கோவப்பட்டான்.

"டேய், நாங்க இந்த பிரச்சினைய உன்மேல ஏத்துறதா இருந்தா, இப்போ உங்கூட இவ்ளோதூரம் வந்து இந்த ரிஸ்க்கான வேலைய செஞ்சியிருக்க மாட்டோம்... எல்லாம் ஜோஷ்வாவுக்காகத்தான்... புரிஞ்சிக்கோ..!" என்று கூறி ஸ்ரீதர் வெளியில் வெறித்துக் கொண்டிருந்தான்.

ஜோஷ்வா, தனக்கு முன்சீட்டிலிருந்த ஸ்ரீதரின் தோளைத் தொட்டு "தேங்க்ஸ்டா" என்றான்.

பிறகு மூவரும் அனைவரும் அமைதியாகவே இருந்தனர்.

மூவருக்குள்ளும், நடந்த நிகழ்வுகளின் மலரும் நினைவுகள் அவரவர் மனநிலைப்படி ஓடிக்கொண்டிருந்தது.

3 மாதத்திற்கு முன்பு...

கோடைவிடுமுறையை கழிக்க, மூவரும் காரில், எஸ்டேட் பங்களாவிற்கு செல்லும் இதே கொடைக்கானல் மலைப்பாதையில் இரவு நேரத்தில் ஏறிக்கொண்டிருந்தனர். குடி அதிகமாக இருந்ததால், சூரஜ் வண்டி கண்ட்ரோலை இழந்து, ரோட்டில் நடந்துப் போய்க்கொண்டிருந்த ஒரு மலைவாசிப் பெண்ணின் மீது வண்டியால் மோதிவிட்டான். அந்த பெண், கார் டயரில் சிக்கி அலறிய சத்தத்தை அந்த மலைப்பிரதேசம் எதிரொலித்தது.

பதறியபடி மூவரும் இறங்கி பார்க்க, அந்த பெண் இறந்திருந்தாள். அவள் முகம் விகாரமாக இருந்தது.

ஸ்ரீதர் கோபத்தில் கத்தினான், " F**K You சூரஜ், What have you done டா..? Fool, அனாவசியமா ஒரு பொண்ணை கொண்ணுட்டியே..? நான் ட்ரைவ் பண்றேன்னு சொன்னேன்ல கேட்டியா..? இப்ப பாரு?"

சூரஜ் அலட்சியமாக, "விட்றா, சரியா பாக்கலை, வேணும்னு யாராச்சும் செய்வாங்களா..?"

இருவர் முகத்தையும் மாறி மாறி பார்த்தபடி ஜோஷ் பயத்துடன், "டேய், எனக்கு பயமா இருக்குடா, ப்... பொ... பொ... போலீஸ்ல சொல்லிடலாம்டா.." என்று புலம்பிக்கொண்டிருந்தான்.

'SHUT THE F**K UP... ஜெயிலுக்கு போற ஐடியா எனக்கில்ல, உனக்கு வேணும்னா நீ போ.. போ..?' என்று சூரஜ் ஜோஷ்வாவை திட்டினான்.

"ஹே சூரஜ் காம் டவுன்" என்று ஸ்ரீதர் இருவரையும் சமாதானப்படுத்தினான்.

அனைவரும் செய்வதறியாமல் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஜோஷ்வா ஐடியா கொடுத்தான், "அப்ப ஒண்ணு பண்ணலாமா, இங்கதான் யாரும் இல்லியே, அப்படியே விட்டுட்டு போயிடலாம்.."

"ஸ்டுப்பிட், இந்த ரூட்ல மேல நம்ம பங்களா மட்டும்தான் இருக்கு, போலீஸ் ஆக்ஸிடெண்டடை விசாரிச்சாங்கன்னா வித்தவுட் டவுட் நாமதான் மாட்டுவோம்... ஸம்திங் எல்ஸ்?" என்று ஸ்ரீதர் யோசித்துக் கொண்டிருக்க

"பேசாம, இப்படியே இந்த பொண்ணை மலைப்பாதையில உருட்டி விட்டுடலாம்.." என்று சூரஜ் தன் பங்கிற்கு கூறினான்.

"நோ நோ... ஒண்ணு பண்ணலாம்... இவளை நம்ம ESTATE GARDEN ல புதைச்சிடுவோம்.. அங்கதான் யாருக்கும் டவுட் வராது, குயிக்" என்று ஸ்ரீதர் சொல்லியதைத் தொடர்ந்து, மூவரும் அந்த பெண்ணை கார் டிக்கியில் கிடத்தினார்கள், ஸ்ரீதர் காரிலிருந்து கொஞ்சம் பெட்ரோலை எடுத்து, ரோட்டில் படிந்திருந்த இரத்தக் கறையில் ஊற்றி, சிகரெட் லைட்டரால் பற்ற வைத்தான். ஒருமாதிரியான வாடை மூவர் வயிற்றையும் புரட்டியது. ஏற்கனவே குடித்திருந்த சூரஜ் வாந்தியெடுத்தான், பிறகு ஸ்ரீதர் கார் ஓட்ட, மூவரும் எஸ்டேட் பங்களாவிற்கு வந்தடைந்தார்கள்.

கார்டனில் கிட்டத்தட்ட 2 மணி நேரமாக குழி வெட்டினார்கள். ஜோஷ்வா அந்த பெண்ணை கார் டிக்கியிலிருந்து தூக்கிக் கொண்டு வரும்போது, அந்த பெண்ணின் உள்ளங்கை ஜோஷ்வாவின் முழங்கையை ஒருமுறை இறுக பிடித்தது.

"ஹ்ஹாஆஆஆஆ..", ஜோஷ் அலறியபடி பிணத்தை நழுவவிட்டு

பங்களாவிற்குள் ஓடினான்.

பயந்தவன் என்பதால் அவனை புறக்கணித்துவிட்டு, ஸ்ரீதரும், சூரஜூம் அந்த பெண்ணை புதைத்து முடித்தனர்.

ஆனால் சென்னைக்கு திரும்பிய பிறகும் ஜோஷ்வாவின் மனநிலை பயங்கரமாக பாதிக்கப்பட்டிருந்தது. அவன் ஏதேதோ புலம்பிக்கொண்டிருந்தான். ஏதேதோ கண்ணுக்கு தெரிவதாக கூறினான். ஜூரம், பயம், இப்படி பல காரணங்களால் வியாபாரத்தில் அவனால் சரியாக ஈடுபட முடியவில்லை.

வேறு வழியின்றி ஸ்ரீதர் ஒரு முடிவெடுத்தான். ஜோஷ்வாவை சைக்கலாஜிக்கலி குணமடைய வைக்க வேண்டும், அதே சமயம் விஷயமும் வெளியில் தெரியக்கூடாது என்று யோசித்தவன். 2 நாள் விடுமுறை எடுத்துக் கொண்டான். கேரளாவிற்கு சென்று வந்ததாக பொய் கூறினான்.

கேரளாவிலிருந்து திரும்பியவனாக கையில் ஒரு எலுமிச்சம்பழத்துடன் வந்தான். கேரள மாந்த்ரீகர் இந்த எலுமிச்சம்பழத்தை அந்த பெண்ணை புதைத்த இடத்தில் புதைத்துவிட்டு, எக்காரணத்தைக் கொண்டும் திரும்பி பார்க்காமல் வர வேண்டும் என்று கூறியதாக புளுகினான்.

சூரஜ் மாந்த்ரீகத்தில் நம்பிக்கை இல்லாதவன் என்பதால் வர மறுத்தான். அவனை வரவழைப்பதற்காக அவனிடம் மட்டும், இது ஒரு பொய் நாடகம் என்றும் இதனால் ஜோஷ்வாவை குணமடைய வைக்க முடியும் என்றும் கூறியதால் சூரஜ்-உம், உடன் வர சம்மதித்தான்.

மூவரும் மீண்டும் கொடைக்கானல் பங்களாவிற்கு வந்து எலுமிச்சம்பழத்தை அந்த பெண்ணை புதைத்த குழியில் புதைத்துவிட்டு, திரும்பி பார்க்காமல் காரில் மலைப்பாதையில் இறங்கி கொண்டிருந்தனர்.

இப்படி நடந்த உண்மைகளை அவரவர்கள் மனதில்

ஓடவிட்டபடியிருக்க...

'நான் உங்ககிட்ட ஒரு விஷயத்தை மறைச்சிட்டேன்..' என்று ஜோஷ்வா ஆரம்பித்தான்.

'என்ன..?'

'நான் அந்த பொண்ணை கார் டிக்கிலருந்து தூக்கிட்டு வரும்போது, அந்த பொண்ணோட உள்ளங்கை திடீர்னு என்னை பிடிச்சிது. அதனாலதான் நான் பயந்து போய் உள்ளே ஓடிட்டேன்..'

'அடப்பாவி, அப்படின்னா, நாம புதைக்கும்போது அந்த பொண்ணு உடம்புல உயிர் இருந்திருக்குமேடா, Why didn't you tell it, You fool?' என்று ஸ்ரீதர் கோபித்துக் கொண்டான்.

'சாரிடா..'

'ஹா ஹா... சரி விடு, இந்த மாதிரி எக்ஸ்பீரியென்ஸ்லாம் லைஃப்ல கிடைக்காது..' என்ற சூரஜ்ஜை ஸ்ரீதர் தலையில் தட்டினான்.

'ஓவ் ஓவ், அடிக்காதடா..?'

'ஹே ஜோஷ், இந்த விஷயங்களையெல்லாம் இனிமே நீ மறந்துடுவே பாறேன். அதான் அந்த மந்திரவாதி கொடுத்த எலுமிச்சம்பழத்தை புதைச்சிட்டோம்ல..? இனி பயமில்ல.. ஓகே..' என்று ஸ்ரீதர் தனது பொய்யை மெய்யாக்கிக் கொண்டிருந்தான்

'ஆமாமா... எல்லாம் அந்த மந்திரவாதி செயல்..' என்று சூரஜ் நக்கலாக கூற, ஜோஷ்வா உண்மையிலேயே தன் மனம் லேசடைவதை உணர்ந்தான்.

ஸ்ரீதர் டேஷ்போர்டிலிருந்து FILMFARE MAGAZINE எடுத்து படிக்க ஆரம்பித்தான்.

சூரஜ், ரியர் வியூ கண்ணாடியில் ஜோஷ்வாவை பார்த்தபடி, 'ஆனா ஜோஷ், you should be careful டா, ஏன்னா, எலுமிச்சம்பழத்தை புதைச்சிட்டு திரும்பி பாக்காம வீடு வந்து சேரணும்னு அந்த மந்திரவாதி சொல்லியிருக்காரு... சோ எக்காரணத்துக்காகவும் திரும்பி மட்டும் பாத்துறாதே, ஓகே..?' என்று வேண்டுமென்றே பயமுறுத்தினான்.

ஸ்ரீதருக்கு இவனிடம் இந்த உண்மையை ஏன்தான் சொன்னோமோ என்றிருந்தது. ரியர் வியூ கண்ணாடியில் ஜோஷ்வாவின் முகத்தைப் பார்த்தான். அவன் மிகவும் பயந்திருந்தான்.

'ஹே ஜோஷ் பின்னாடி பாரேன் ஒரு வாட்டர் ஃபால்ஸ் எவ்வளவு அழகா தெரியுது..' என்று சூரஜ் கலாய்த்தான்... ஆனால் ஜோஷ் திரும்பாமல் இருந்தான்.

'சூரஜ் வேண்டாம் விளையாடாதே..' என்று ஸ்ரீதர் அவனை எச்சரித்தான்.

'ஜோஷ், Abovvvvvve Turn' என்று ஸ்கவுட்-இல் கத்துவது போல் கத்தினான்.

இம்முறையும் ஜோஷ் அசரவில்லை. ஸ்ரீதர் புக் படித்துக் கொண்டிருக்க, வண்டி ஒரு ஹேர்பின் பெண்டில் அமைதியாக திரும்பிக் கொண்டிருந்தது. சூரஜ் மெலிதாய் சிரித்துக் கொண்டான். ஸ்ரீதர், அந்த புத்தகத்தில், Crossword Puzzle ஒன்றை கணித்துக் கொண்டிருந்தான்.

**DOWN**
***13. RGV's horror flick starring rangeela girl (5)***

***B. H. O. O. T.***

என்று அந்த புத்தகத்தில் எழுதிக் கொண்டிருக்க, சூரஜ் கத்தினான்.

'ஹே, ஜ்.. ஜோஷ், காருக்கு பின்னாடி அ..அ...அந்த பொண்ணு நின்னிட்டிருக்காடா..?' என்று கதறியபடி கூற ஜோஷ் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

சூரஜ் பயங்கரமாக சிரித்தான், 'ஹா ஹாஹ்ஹா... Now I got you, நீ திரும்பி பாத்துட்டே.. ஹாஹ்ஹா..' என்று சிரித்துக் கொண்டான்.

ஶ்ரீதர் தனது புத்தகத்தால் சூரஜ்-ஐ போட்டு அடித்தான். 'உன்னையெல்லாம் வச்சிக்கிட்டு எந்த காரியத்தையும் பண்ண முடியாதுடா..'

'ஹே ஹே, ஶ்ரீ, ரிலாக்ஸ்... வலிக்குது...' என்று கூறி சிரித்தபடி வண்டி ஓட்டிக்கொண்டே பேசினான்.

'ஜோஷ், Sorry டா, JUST FOR FUN தான். பயப்படாதே, நான் சும்மா விளையாட்டுக்குத்தான் சொன்னேன்' என்று சூரஜ் கூற, ஶ்ரீதரும் புத்தகத்தை மூடி வைத்தபடி 'Don't Worry டா, நாம ரொம்ப தூரம் திரும்பி வந்துட்டோம், இனிமே நீ திரும்பி பாத்தாலும் தப்பில்லை.. ஓகேவா' என்று கூறியபடி ஶ்ரீதர் ஃப்ரண்ட் சீட்டிலிருந்து திரும்பி ஜோஷ்வாவைப் பார்க்க, அங்கே...

அந்த மலைவாசிப்பெண் உட்கார்ந்திருந்தாள்...

அதே விகாரத்துடன்...

'ஆஆஆஆ...' என்று ஶ்ரீதர் அலற, அதே நேரம் வண்டி ஓட்டிக் கொண்டிருந்த சூரஜ்ஜும் ரியர் வியூ மிரரில் பார்க்க, பின்சீட்டிலிருந்த அந்த மலைவாசிப்பெண் சூரஜ் மீது பாய்ந்தாள்.

வண்டி கண்ட்ரோல் இழந்து, மலைச்சரிவில் அடர்ந்த காட்டுக்குள் சரிந்து, கிடுகிடு பள்ளத்துக்குள் விழுந்தது...


ஸ்ரீதர் மெல்ல கண்விழித்தான்...

ஏடாகூடமான ஒரு பொசிஷனில் இருந்தபடி கை கால்களை இயக்க முடியாத நிலையில் இருந்தான்...

ஜோஷ்வாவும் சூரஜும் அருகில் இறந்திருந்தனர்...

உயரே உயரே தூரத்தில் ஒரே ஒரு வெள்ளை புள்ளியாக வெளிச்சம் தெரிந்தது. கார் விழுந்திருக்கும் பள்ளம் மிக ஆழமானது என்பதை ஸ்ரீதர் உணர்ந்தான். மாலை நேரம் நெருங்க நெருங்க, அந்த ஒரு புள்ளி வெளிச்சமும் மறைந்து கும்மிருட்டு சூழ்ந்தது.

அந்த இருட்டில் ஸ்ரீதரின் உயிர்துடிப்பு மட்டும் சத்தமாக கேட்டுக் கொண்டிருக்கிறது. ஸ்ரீதர் இன்னும் உயிருடன்தான் இருக்கிறான். முடிந்தால் சென்று அவனை காப்பாற்றுங்கள்...




# 01

### *நடப்பது*

***ரயில்வே தண்டவாளத்தில் முகிலன் மிகவும் சோகமாக நடந்து கொண்டிருந்தான். அவனை இப்போது யார் பார்த்தாலும் தற்கொலை செய்து கொள்ள போகிறான் என்று கண்டுபிடித்து காப்பாற்றிவிடுவார்கள். ஆனால் அந்த நேரம் அங்கு யாரும் இல்லாமல் இருந்தது முகிலனின் அதிர்ஷ்டமா துரதிர்ஷ்டமா என்று தெரியவில்லை.***

தூரத்தில் ட்ரெய்ன் ஹாரன் சத்தம் கேட்டது. முகிலனின் உடம்பு முழுவதும் ஒருவித நடுக்கம் பரவியது. அழுத்தமாக மூச்சு விட்டுக் கொண்டான்.

இப்போது ட்ரெய்ன் நெருங்கும் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாக பெரிதாகிக் கொண்டே வந்தது. தண்டவாளத்தில் ஆள் நிற்பது ட்ரெய்ன் டிரைவருக்கு தெரியாதபடி அந்த பாதை வளைந்து காணப்பட்டது.

ட்ரெய்ன் சத்தம் இப்போது மிக அருகில் கேட்க, முகிலன் அப்படியே தண்டவாளத்தில் காதுகளை பொத்திக் கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

டிரைவர் கடைசி நிமிடத்தில் முகிலனை பார்த்திருக்க வேண்டும். உடனே ஹார்ன் அடித்தார்.

ப்ப்ப்பாஆஆஆஆஆஆஆங்ங்ங்ங்ங்ங்.....

ஆஆஆஆஆஆஆஆஆஆஆஆஆஆஆஆ

ட்ரெய்ன் ஹாரன் சத்தத்தோடு முகிலின் அலறல் சத்தமும் சேர்ந்து ஒலித்தது.

இப்போது ட்ரெய்ன் கடந்து போகும் சத்தம் மட்டும் கேட்டது. முகிலன் வலி எதுவும் உணராதவனாக கண்களை மெல்ல திறந்து பார்த்தான். ட்ரெய்ன் பக்கத்து தண்டவாளத்தில் போய்க்கொண்டிருந்தது.

'ஆஆஆஆஆஆ....' கதறி அழுதான்.

ஒரு தற்கொலையை கூட தன்னால் ஒழுங்காக செய்ய முடியவில்லையே. இவ்வளவு கெட்ட நேரமா தனக்கு என்று எண்ணி நொந்து கொண்டான்.

நடந்தவற்றை நினைத்து பார்த்தான்.

# 02
## நடந்தது

முன்தினம் நள்ளிரவு 2.00 மணி...

பேச்சுலர் அறையின் அத்தனை அடையாளங்களும் அந்த அறையில் படிந்திருந்தது.

கீபோர்டின் டைப்ரைட்டிங் சத்தம் தொடர்ந்து மழை வருவது போல் கேட்டுக் கொண்டிருக்க. அந்த சத்தத்தால் தரையில் படுத்துக் கொண்டிருந்த விக்கி, தூக்கம் கலைந்து கண்திறந்தான். தலையை மட்டும் எம்பி பார்த்தான். முகிலன், கம்ப்யூட்டரில் எதையோ டைப் செய்து கொண்டிருந்த்து தெரிந்தது.

'முகிலா? இந்நேரத்துக்கும் தூங்க விடாம என்னடா டைப் பண்ணிட்டிருக்கே..?!'

'சாரிடா, இன்னும் கொஞ்ச நேரம்தான் முடிச்சிடுறேன்.. ப்ளீஸ் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோடா..?' என்று கூறிய முகிலன், கண்ணாடி அணிந்தபடி தனது தட்டச்சு வேலையை தொடர்ந்து கொண்டிருந்தான்.

விக்கிக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. எழுந்து அவனருகில் சென்றான்.

'காலையில பண்ணக்கூடாதா..?'

'இல்லடா, இந்த ஸ்க்ரிப்டை நாளைக்கு 'A4 ADz' கம்பெனில சப்மிட் பண்ணனும்டா..'

'அவ்வளவு அவசரமா..?'

'ஆமா, இந்த ஸ்க்ரிப்ட் நாளைக்கு ஓக்கே ஆச்சுன்னா, எனக்கு இமீடியட் பேமண்ட் கிடைக்கும். ஊருக்கு பணம் அனுப்பனும்டா..? அம்மா ஃபோன் பண்ணி புலம்புறாங்க. ஊருல கடங்காரன், மானத்தை வாங்குறானாம்'

'ப்ச், சரி ஏதோ செய்' என்று திரும்பியவன் ஏதோ ஞாபகம் வர, மீண்டும் முகிலனைப் பார்த்து 'ஆமா, நான் ஒரு கான்செப்ட் கேட்டிருந்தேனே..? ஊதுபத்தி AD-க்கு.. முடிச்சிட்டியா..?'

'ஆங்! அது ரெடியா இருக்குடா' என்று கூறிய முகிலன், டேபிள் டிராவை திறந்து, ஒரு ஸ்டிக் ஃபைலை எடுத்து கொடுத்தான். விக்கி அதை வாங்கி படித்து பார்த்தான். அவனுக்கு மிகவும் பிடித்து போனது.

'சூப்பர்டா, நல்லாருக்கு, நான் எங்க டைரக்டர்கிட்ட குடுக்குறேன். என்னன்னு அப்புறம் பாத்துக்கலாம்' என்று ஃபைலை டேபிள் மேல் வைத்துவிட்டு, விக்கி மீண்டும் படுக்க சென்றான்.

தரையில் படுத்தவனிடம், முகிலன் மிகவும் தயக்கத்துடன், 'மச்சான், கேக்குறேன்னு கோச்சுக்காதை... உங்கிட்ட ஒரு 20,000 ரூபா இருக்குமாடா..?'

விக்கி அவனை ஒரு 2 விநாடிகள் பார்த்து, 'ரொம்ப சாரிடா, இப்ப என்கிட்ட பணம் எதுவுமில்ல..' என்று கூறினான்.

'சரிடா, பரவாயில்ல, நீ போய் தூங்கு, நான் இதை சீக்கிரம் முடிச்சிடுறேன்...' என்று கூறி சற்றும் யோசிக்காமல் தனது கவனத்தை கம்ப்யூட்டர் மாணிட்டரில் புதைத்தான்.

---

## 03
### நடப்பது

முகிலன் மீண்டும் தண்டவாளத்தை பார்த்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எந்த வண்டியும் வருவது போல் தெரியவில்லை.

எனவே தண்டவாளப் பகுதியை கடந்து போய்க்கொண்டிருந்தான். முடியெல்லாம் கலைந்து, பார்ப்பதற்கு மனநிலை பாதிக்கப்பட்டது போல் காட்சியளித்தான். ஆனால் அவனுக்கு பாதிப்பு மனநிலையால் இல்லை நிதிநிலையால்தான் என்று அவனைப் பார்ப்பவர்களிடம் யார் கூறுவது..?

சுற்றும் முற்றும் பார்த்தான். கொஞ்ச தூரம் நடந்தான்.

தூரத்தில் ஒரு பாலம் தெரிந்தது. கீழே கூவம் நதி ஊர்ந்து கொண்டிருந்தது. கூவத்தில் அடையாளம் தெரியாத நபரின் பிணம் கண்டெடுப்பு என்று பலமுறை தினசரிகளில் படித்தது முகிலனுக்கு ஞாபகம் வந்தது. தன் பிணமும் அப்படியே கிடைக்கட்டும் என்று

நினைத்தவன், அந்த பாலத்துக்கு அருகில் சென்றான். கண்களை மூடிக் கொண்டு அந்த பாலத்தில் ஏற எத்தணித்தான். தூரத்தில் ஒரு கூட்டத்தின் குரல் கேட்டது.

*தடை செய்! தடை செய்!*
*பி.டி. கத்திரிக்காயை தடை செய்!*
*தடை செய்! தடை செய்!*
*பி.டி. கத்திரிக்காயை தடை செய்!*

ஒரு மாபெரும் கூட்டம், கையில் *'பி.டி. கத்திரிக்காயை தடை செய்!'* என்று பலகைகள் பிடித்தபடி பாலத்தில் நுழைந்து கொண்டிருந்தனர். *'ஹய்யோ! இவர்கள் முன் பாலத்திலிருந்து குதித்தால் கண்டிப்பாக காப்பாற்றி விடுவார்கள் '* என்று நினைத்தவன் உடனே பாலத்திலிருந்து நகர ஆரம்பித்தான்.

*தடை செய்!*
*தடை செய்!*

*'ஆஆஆஆஆஆஆஆஆஆ'* என்று நொந்து போய் கத்தினான். அந்த சத்தம் கூட்டத்தின் சத்தத்தின் நடுவே சத்தமில்லாமல் கேட்டது.

*மீண்டும் நடந்த நிகழ்வுகள் அவன் மனதில் ஓடியது.*

---

## 04
### *நடந்தது*

அன்று காலை 9 மணி, முகிலன் தெம்பாகவே இருந்தான். விக்கி எழுந்து பார்த்த போது, சீராக டிரெஸ் செய்து கிளம்ப ஆயத்தமாயிருந்தான்.

'என்னடா, தூங்கவேயில்லியா..' என்று விக்கி ரங்கநாதரைப் போல் படுத்துக்கொண்டே சிரித்தபடி கேட்க

'4 மணிக்கே படுத்துட்டேன்டா'

*'4 மணியா! அதுசரி! தூங்குற டைம்தான்டா அது...'*

*'நீ கிளம்புலயா?'*

'டைரக்டர் 11 மணிக்கு மேலதான் வருவாரு... நான் 10.58 க்கு ஆஃபீஸ்ல இருந்தா போதும். மணி 9-தானே ஆவுது. இன்னும் ஒரு 1 மணிநேரம் தூங்கிட்டு அப்புறமா ரெடியாயிக்கிறேன்.' என்று விக்கி கூறிவிட்டு மீண்டும் புரண்டு படுத்தான்.

முகிலன் அவனைப் பார்த்து சிரித்தபடி, கதவை மூடிக் கொண்டு கிளம்பினான். அதுதான் அன்று அவன் சிரித்த கடைசி சிரிப்பு

---

# 05

## நடப்பது

பாலத்திலிருந்து கொஞ்ச தூரம் தள்ளி ஒரு ஹைவேயில் நடந்து போய்க்கொண்டிருந்தான்.

'எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்குது. எதுவுமே வேண்டாம் செத்துடலாம்னாலும் ஏதாவது ஒரு விஷயம் தடுத்துக்கிட்டே இருக்கு... இந்நேரம் நான் செத்திருந்தா, எப்படி இருந்திருப்பேன். காத்தா அலஞ்சிட்டிருந்திருப்பேன். எந்த கடன் தொல்லையும் இல்லை, எந்த சச்சரவும் இல்ல, எப்படியாவது இன்னிக்கு செத்துடணும்.... ஆனா எப்படி...?' என்று யோசித்தபடி திரும்பி பார்க்க, தூரத்தில் ஒரு பஸ் வந்து கொண்டிருந்தது. சட்டென்று அருகிலிருந்த மரத்தில் சென்று மறைந்து கொண்டான்.

இந்த பஸ் அருகில் வந்ததும், குறுக்கே குதித்துவிட வேண்டியதுதான் என்று யோசித்தபடி காத்து நின்றான்.

பஸ் அருகில் நெருங்கி கொண்டிருந்தது, குதிக்க தயாராகிக் கொண்டிருந்த போது அவனது செல்ஃபோன் ஒலித்தது.

'சே! யாரது இந்நேரத்துல..!' என்று எடுத்து பார்த்தான்.

*விக்கி காலிங்* என்று டிஸ்ப்ளேவில் தெரிந்தது.

எடுக்கலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது

ஸ்ஸ்ஸ்ஸ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ் என்று அந்த பஸ் அவனைக் கடந்து சென்றது.

"நோஓஓ ஆஆஆஆஆ சே!" என்று மீண்டும் நொந்துக் கொண்டான்.

---

# 06
## நடந்தது

அன்று காலை 10 மணிக்கு...

A4 ADz மெயின் கேட் சாத்தப்பட்டிருந்தது. வெளியில் வயதான செக்யூரிட்டி கடுப்பாக அமர்ந்திருந்தார். முகிலன் அவரை நெருங்கினான்.

"என்ன வேணும்?" என்று செக்யூரிட்டி நபர் கேட்டார்

"எண்ட்ரி போடணும்"

"கம்பெனி மொத்தமா மூடிட்டாங்க! போயா..!"

"மூடிட்டாங்களா.." என்றதும் முகிலன் வயிற்றில் ஏதோ ஒரு விஷயம் கிலிமூட்டியது. அவன் மனது அவனுக்குள் புலம்ப ஆரம்பித்தது.

"ஹய்யோ, இந்த கம்பெனிய நம்பித்தானே எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணியிருந்தேன். அம்மா ஃபோன் பண்ணா என்ன சொல்றது. வேற யார்கிட்ட போய் பணத்தை கேக்குறது. எதுக்கு கம்பெனிய மூடிட்டாங்க. என் கெட்ட நேரம் இவங்களுக்கும் தொத்திக்கிச்சா... 4 நாள் முன்னாடி ஃபோன்ல கான்செப்ட் சொன்னப்போ சந்தோஷமா கேட்டாங்களே..! எப்படியும் இன்னிக்கி பணம் கிடைச்சிடும்னு நினைச்சேனே!"

"தம்பி... ஹலோ... உன்னைத்தாம்பா... இங்க நின்னுக்கிட்டு ஃபீல் பண்ணாத கிளம்பு..?" என்று வாட்சுமேன் அவன் நினைவுகளை களைத்தார்...

"எ..ஏன் ம்ம்...மூடிட்டா....ங்...?"

'ஆங்?'

'ஏன் கம்பெனிய மூடிட்டாங்க..?'

'ஏதோ ஷேர் மார்கெட்ல இவங்க பங்குல்லாம் பயங்கர நஷ்டமாயிடுச்சாம். 3 நாளைக்கு முன்னாடியே மூடிட்டாங்க... நானும் இன்னும் ஒரு வாரந்தான். சம்பளம் கொடுத்தாங்கன்னா போயிட்டேயிருப்பேன். கிளம்புப்பா' என்று கடுப்பை காட்டினார்.

அங்கிருந்து நகர்ந்தவன், அந்த கம்பெனியின் க்ரியேட்டிவ் ஹெட் அன்பரசனுக்கு ஃபோன் செய்தான்..

*நீங்கள் தொடர்பு கொள்ளும் எண் தற்சமயம் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டுள்ளது என்று கணிணிக் குரல் கேட்டது.*

# 07
## நடப்பது

மீண்டும் ஹைவேயில் மரத்தின் கீழ் நின்றிருந்தான். தூரத்தில் ஒரு டேங்க்கர் லாரி வருவது தெரிந்தது.

இம்முறை மிஸ் பண்ணக் கூடாது. எப்படியாவது குதித்துவிட வேண்டும் என்று கையிலிருந்த செல்ஃபோனை பாக்கெட்டில் வைத்துக் கொண்டு மீண்டும் குதிக்க தயாராக நின்றான்.

டேங்க்கர் லாரி அருகில் வந்து கொண்டிருந்தது. மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவன் சட்டென்று ரோட்டில் குதித்தான்.

லாரி சட்டன் பிரேக் அடித்து மிகவும் சிரமப்பட்டு ரோட்டை குறுக்க மறைத்ததுபோல் நின்றது. முகிலன் எம்பி பார்த்தான். அவனுக்கும் லாரியின் சக்கரத்திற்கும் 10 இன்ச் இடைவெளி இருந்தால் அதிகம். அவ்வளவு நெருக்கமாக நின்றிருந்த லாரியிலிருந்து இருவர் குதித்து இறங்கி வந்தனர். கீழே முகிலன் உயிருடன் லாரி டயரை பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவர்களுக்கு பயங்கர கோபம் வந்தது. முகிலனை அலேக்காக தூக்கியபடி டிரைவர் வசைமொழி பாட ஆரம்பித்தான்.

'ஓ*** டேய், சாவுகிராக்கி, என்ன ம**** இங்க வந்து விழுறே...

' என்று திட்டிக் கொண்டே கன்னத்தில் 2 முறை அறைந்தான். உடன் இருந்த க்ளீனர் இப்போது முகிலனை பின்மண்டையிலிருந்து தட்டியடித்த படி 'மவனே யாருகிட்ட... காசு புடுங்குற ப்ளான்ல குதிச்சிருப்பாண்ணே..? அதானெடா..? டேய் நாயே, லாரி கவுந்திருந்தா ஒங்கொப்பனா வந்து காசை குடுப்பான்'

மாறி மாறி இருவரும் அவனை அடித்துக் கொண்டிருக்க, வலி தாங்காமல் அழுதபடி முகிலன் 'சாரி, சாரிங்க..' என்று புலம்பிக் கொண்டிருந்தான்.

'என்னடா சாரி, நாய, இரு உன்னையெல்லாம் போலீஸ்ல மாட்டிவிட்டாத்தான் திருந்துவே..' என்று கூறியவன் 'டேய் கந்தா, இவனை புடிச்சி லாரில ஏத்து, போற வழியில போலீஸ் ஸ்டேஷன்ல புகார் குடுத்துட்டு போலாம்' என்று டிரைவர் கூறியதைக் கேட்ட முகிலனுக்கு நிலைமை மோசமாவது புரிந்தது. உடனே அவர்கள் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு அங்கிருந்து ஓட ஆரம்பித்தான்.

'ஏ... ஏய், புட்றா அவனை... ஏய்.... த்த்தெரி' என்று டிரைவர் ஒரு 5 அடி ஓடி துரத்துவது போல் பாவ்லா செய்துவிட்டு நின்றார்.

முகிலன் கண்மண் தெரியாமல் ஓடிக்கொண்டிருந்தான்.

---

## 08

நடந்தது

அன்று காலை 11.00 மணிக்கு

என்ன செய்வதென்று தெரியாமல் முகிலன் பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்தான்.

அவன் செல்ஃபோன் ஒலித்தது.

'அம்மா காலிங்' என்று டிஸ்ப்ளேயில் தெரிந்தது.

தயக்கமாகத்தான் எடுத்தான்.

'ம்மா...?'

ஆனால், மறுமுனையில் ஒரு ஆண்குரல் கேட்டது "அண்ணே நான் அகிலன் பேசறேண்ணே... அம்..அம்மாவுக்கு... நெஞ்சுவலி வந்து படுத்து கிடக்கிறாங்கண்ணே..! டாக்டருகிட்ட போவக்கூட காசில்லண்ணே..! ஏதாச்சும் பண்ணுண்ணே..! எனக்கு பயமாயிருக்குண்ணே!" என்று அழ ஆரம்பித்தான்.

"எ...என்னடா சொல்றே..? எப்..படி, என்ன ஆச்சு!"

"அந்த கடங்காரன் வந்து பயங்கரமா சத்தம் போட்டுட்டு போயிட்டாண்ணே! கேவலம் 20 ஆயிரம் பணத்துக்கு என்னென்னமோ பேசிட்டாண்ணே! அம்மாவுக்கு அவமானமாயிருச்சி...! தெருவே கூடி நின்னு வேடிக்க பாத்துச்சு..! அம்மா ரொம்பவும் அழுதுச்சுண்ணே! அப்பிடியே நெஞ்சை பிடிச்சிக்கிட்டு உக்காந்திடுச்சி" என்று அழுதபடி கூறினான்.

இடிந்து போய் பஸ் ஸ்டாண்டு ப்ளாட்பாரத்தில் அமர்ந்தான்.

"சீக்கிரம் வந்துருண்ணே! எனக்கு பயமாயிருக்கு..! மறக்காம பணத்தை எப்டியாச்சும் கொண்டுவந்துரு! அந்த கடங்காரன் மூஞ்சில வீசிட்டுத்தான் மறுவேலை." என்று கூறி ஃபோனை வைத்துவிட்டான்.

இவன்கிட்ட என்னன்னு சொல்றது, AD கம்பெனி மூடிட்டதையா! நண்பன்கிட்ட காசு கேட்டு கிடைக்கலைன்னா! என்ன சொல்லியும் என்ன, அம்மாவுக்க நெஞ்சுவலி வந்துடுச்சு, ஊருக்கு போகவும் காசில்லாம ப்ளாட்பாரத்துல உக்காந்திட்டிருக்கேன். இதுக்கு மேலயும் உயிர் வாழ்ந்து என்ன பண்றது, பேசாம செத்து தொலைக்க வேண்டியதுதான்

என்று முடிவெடுத்து கிளம்பினான்.

---

## 09
### நடப்பது

நடந்த நிகழ்வுகளை நினைத்துப் பார்த்தபடி ஹைவே ரோட்டில் ஓடிக்கொண்டிருந்த முகிலனின் செல்ஃபோன் மீண்டும் ஒலித்தது.

அன்பரசன் - A4 ADs என்று டிஸ்ப்ளே காட்டியது.

மூச்சுவாங்கியபடி ஓரமாக நின்று பேசினான்.

'ஹ..லோ..'

'தம்பி நான் அன்பரசன் பேசறேம்ப்பா, நீ சொன்ன கான்செப்டுக்கு இன்னிக்கி ஸ்க்ரிப்ட் கொண்டுவர்றேன்னு சொன்னியே..? ரெடியா..?'

மூச்சு வாங்கியபடி 'சா...ர்... ரெடி... சார்... நா... நான் ஆஃபீஸ்க்கு வந்தேன். ஆனா... கம்பெனி... மூடிட்டாங்கன்னு... வாட்சுமேன் சொன்னாரு சார்..'

'ஆமாப்பா, A4 ADs மூடிட்டாங்க, நான் 2 நாள் முன்னாடி 'AD ATTRACTION'ல ஜாய்ன் பண்ணிட்டேன். இப்போ இங்க எல்லாமே டபுள் பேமண்ட் , உன் ஸ்க்ரிப்டுக்கும் டபுள் பேமண்ட் வாங்கி தர்றேம்ப்பா.. சீக்கிரம் கொண்டுவா.. அட்ரஸ் மெசேஜ் பண்ணிவிடுறேன். ஈவினிங் 4 மணிக்கு உன்னை எக்ஸ்பெக்ட் பண்றேன்' என்று கூறி ஃபோனை கட் செய்தார்.

முகிலனுக்கு என்ன நடக்கிறதென்றே புரியவில்லை. சற்றுநேரம் முன் அவன் குறுக்கே விழுந்த லாரி இப்போது அவனை கடந்து சென்றது. உள்ளிருந்த க்ளீனர் அவனை முறைத்துக் கொண்டே சென்றான். முகிலன்அவனைப் பார்த்தான். க்ளீனர் நாக்கை கடித்து 'ஜாக்கிரதை' என்பது போல் விரல் காட்டினான்.

முகிலன் முகம் மலர்ந்தபடி திரும்பிக் கொண்டிருந்தான், வரும் வழியில் பாலத்தை கடந்து வந்தான்.

மீண்டும் செல்ஃபோன் ஒலித்தது

அம்மா காலிங் என்று டிஸ்ப்ளேயில் வந்தது

'ஹலோ'

'அண்ணே! கிளம்பிட்டியா?'

'இல்லப்பா இப்போதான் பணம் ஏற்பாடாயிருக்கு, இனிமேதான்

கிளம்பணும்"

"வேண்டாண்ணே! அவசரமில்ல! அம்மாக்கு சரியாப்போச்சு"

"எப்படிடா..?"

"நம்ம பக்கத்தூரு தாய்மாமாகிட்ட ரொம்ப நாளு பேச்சுவார்த்தை இல்லாம இருந்தோமில்ல? அவருக்கு ஃபோன் போட்டு வெக்கத்தைவிட்டு நிலைமையப் சொன்னேன். அவரு உடனே பதறிப் போய் தங்கச்சின்னு ஓடி வந்து கடனையெல்லாம் அடச்சிட்டாரு, டாட்டரையும் அழச்சிட்டு வந்தாரா, அம்மாவும் குணமாயி எழுந்து உக்காந்திருச்சி..! நீ பொறுமையாவே வாண்ணே..!" என்று கூறி ஃபோனை வைத்தான்.

முகிலன் கண்களில் நீர் வழிந்தது. முகம் மலர்ந்ததபடி பாலத்தின்கீழ் பார்த்தான். நல்லவேளை குதிக்கவில்லை என்று அங்கிருந்து தனது ரூமை நோக்கி நடையைத் தொடர்ந்தான்.

இப்போது அவன் முதலில் நின்றிருந்த தண்டவாளத்தை கடந்துக் கொண்டிருந்தான்.

மீண்டும் ஃபோன் ஒலித்தது.

விக்கி காலிங் என்று டிஸ்ப்ளேயில் வந்தது

"ஹே விக்கி?"

"டேய், என்னடா ஃபோன் பண்ணா எடுக்க மாட்டியா...?"

"சாரிடா..! என்ன விஷயம்?"

"நீ என்கிட்ட குடுத்தியே ஊதுபத்தி கான்செப்ட், அதை எங்க டைரக்டர் ஓகே பண்ணிட்டாருடா, நல்ல பேமண்ட், 2 நாள்ல காசு கைக்கு வந்துரும். இன்னும் 5 ஐடத்துக்கு கான்செப்டு வேணுமாம், உன்னையே எழுதச்சொல்றாரு... சரியா...? அப்புறம் நீ கேட்ட 20,000 ரூபாய இப்போதைக்கு முன்பணமா கேட்டு வாங்கிட்ட வர்றேன். சரியா? சந்தோஷம்தானே..?"

"சரிடா, ரொம்ப தேங்கஸ்டா, ரொம்ம்ம்ம்ம்ப தேங்க்ஸ்" என்று கூறியபடி திரும்பினான்.

அவனுக்கு வெகு அருகில்... ஒரு பெரிய ட்ரெய்ன் இன்ஜின் வேகமாக வருவது தெரிந்தது.

ப்பாஆஆஆஆஆஆஆஆஆஆஆங்ங்ங்ங்ங்ங்'

'ஆஆஆஆஆஆஆஆ'

இம்முறை முகிலன் நின்றிருந்த தண்டவாளத்திலேயே இரயில் சென்றது.

—— முடிவு ——